Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, தை 10- ஆம் நாள். ரஜபு பிறை 23 (23-1-60) சனிக்கிழமை இதழ் 51.

# சிட்னியின் வருகை

## சர்வாதிகாரத்தின் வருகையா?

## பொதுத் தேர்தல் நடைபெறுமா?

### அரசியல் வட்டாரங்களில் சந்தேகம் வலுவடைகிறது

— அரசியல் நிருபர் —

**அரசியல் சட்டங்கள், பொது மக்கள் அபிப்பிராயம், பத்திரிகைகள், ஏனைய அரசியல் கட்சிகள்—இவையெல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு அவசியமில்லாத ஒரு உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சை புதிதாக உண்டுபண்ணி, அதன் நிரந்தரக் காரியதரிசியாக பொலிஸ் பகுதியிலிருந்து அகற்றப்பட்ட ஒருவரை நியமித்து, நாடு முழுவதும் சதிச் செயல்கள் மலிந்து விட்டன என்று பூச்சாண்டி காட்டுகிருர் பிரதமர் திரு. தகநாயக்கா 'என்னேக் கண்டு பயப்படாதீர்கள் என்று அபயம் அளிக்கிருர்' திரு. ஸிட்னி சொய்ஸா.**

நாட்டில் பயம் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவர்களே நிரூபிக்கிருர்கள் அல்லவா? சதிச்செயல்களால் நாடு பயப்படவில்லே. தகாவின் செயல்களால்தான் பீதி ஏற்பட்டிருக்கிறது. அடுத்த கணம் என்ன நடக்குமோ என்று எல்லோரும் கலங்கி நிற்கிருர்கள். சட்ட திட்டங்களேப் பறக்கவிட்டுவிட்டு தான்தோன்றித் தம்பிரானுக அட்டகாசம் புரிவதற்கு இன்னெரு சொல் 'சர்வாதிகாரம்'. மக்கள் எல்லோரும் வழக்கத்தைவிட அமைதியாகத் தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் சமயத்தில், பிரதமர் செய்த இந்த செயல் பொதுமக்களின் மனதில் பலவிதசந்தேகங்களேயும் சஞ்சலத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது.

தேர்தலேத் தடம் புரளச் செய்வதே அவருடைய நோக்கம் என்று நாட்டில் ஏற்கனவே நிலவியிருந்த அபிப்பிராயத்தை இச் செயல் நன்ருக உறுதிப்படுத்துகிறது. தேர்தல் நடக்காவிட்டால் அப்புறம் என்ன? சர்வாதிகாரமா அராஜகமா? என்று பொதுமக்கள் கலங்குவதில் காரணமுண்டு.

முன்னுள் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சிட்னி சொய்ஸா, புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னர் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த திரு. சொய்சா, சென்ற ஆண்டு நவம்பர் மாத இறுதியில், நீதியமைச்சர் திரு. வலண்டைன் ஜெயவிக்ரமாவிற்கு எதிராக எதிர் கட்சியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பின்னர், பலவந்தமாக வேலேயிலிருந்து நீக்கப்பட்டு மூன்று மாத லீவு கொடுக்கப்பட்டது. பண்டார நாயக்கா கொலே வழக்கில் தமக்குள்ள சம்பந்தத்தை யொட்டி இவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையே இத்தகைய முடிவை ஏற்படுத்தியது.

இதன் பின்னர் வவனியா ரயில் விபத்து நடந்ததும், பிரதமர் திரு. தகநாயக்கா இம்மாதம் 11-ம் திகதி பிரதமரால் அழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தில், திரு சிட்னி டி சொய்சாவை மீண்டும் பதவிக்குக் கொண்டுவர வேண்டுமென பிரதமரின் முயற்சியை, நீதியமைச்சர் திரு. ஜயவிக்ரம முழு மூச்சுடன் எதிர்த்தார். அரசாங்கசேவைக் கமிஷனும் அவர்களுடன் சேர்ந்து கொள்ளவே, பிரதமர் முயற்சி தோல்வியடைந்தது.

பத்துநாட்களுக்குப் பிறகு, இப்புதிய அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. எடுத்ததற்கெல்லாம் சதி வேலேயே காரணமெனத் திரு. தகநாயக்கா கூறிவந்ததன் காரணம் இப்பொழுது வெளியாகிவிட்டதாக அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன. சமீபத்தில் மாஹோ அருகில் ரயில் புரண்டது, மண் சரிவின் காரணமே என புகையிரதப் பகுதியினர் கூறியதைக் கூட தகநாயக்கா மறுத்துவிட்டு, அதற்கும் சதி வேலேயே காரணமெனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இதன் விளேவே இப்புதிய அமைச்சு. தகநாயக்கா பிரதமராகப் பதவியேற்ற உடனே தாம் சில மாதங்களில் நாட்டு மக்களேயே திணற அடிக்கும் பல காரியங்களேச் செய்யப்போவதாக உறுதி கூறினர். அந்த அளவாவது அவரது வாக்குறுதி நிலேத்துவிட்டது!

பார்லிமென்ட் அறிவிப்பின்றி கலேக்கப்பட்டது. அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டனர். தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சிகரெட் புகையிலேக்கு நல்ல எதிர்காலம்

### யாழ்ப்பாண மக்களுக்கு அதிகாரிகளின் யோசனே

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள மக்கள் சிகரெட் புகையிலே உற்பத்தியில் போதிய அளவு அக்கறை காட்டாதிருப்பது தமக்கு மிகுந்த கவலேயை ஊட்டி வருவதாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீ காந்தா, யாழ்ப்பாணம் சிகரெட் புகையிலே உற்பத்தியாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார். இக் கூட்டம் சென்ற சனிக்கிழமை காலே யாழ்ப்பாணம் பாரதி பாஷிய பாடசாலேயில் நடைபெற்றது. சங்கத் தலேவர் திரு. வ. சுப்பிரமணியம் தலேமை வகித்தார். அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாண மக்களேச் சிகரெட் புகையிலே உற்பத்தியில் மிகத் தீவிரமாக ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டார்.

உதவிப் புகையிலே அதிகாரி திரு. இ. ஜெயனெற்றி பேசும்போது சிகரெட் புகையிலேக்கு நல்ல எதிர்காலம் இருப்பதால் யாழ்ப்பாணத்தவர் அத்துறையில் நாட்டம் கொள்ளவேண்டுமெனத் தெரிவித்தார். சங்கச் செயலாளர் திரு. க. இ. குமாரசாமி ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

## சீமென்ஸ்

உறுதிக்கும் உழைப்புக்கும் பேர்போனது.
சீமென்ஸ் வீட்டு தண்ணீர் விநியோக பம்புகள்
தாமே இயங்கும் இந்த அற்புதமான பம்புகள்
சகல விதமான தேவைகளுக்கும் பயன்படும்:
இல்லங்களுக்கு
தோட்டங்களுக்கு
தோட்டப் பாத்திகளுக்கு
சிறிய விவசாயப் பண்ணேகளுக்கு
பலகாலம் கெட்டுப்போகாமலிருக்கும்
தன்மையுள்ளனவாதலால்
இந்தப் பம்புகள் பாவிப்புக்கு
மலிவானவை, பாதுகாப்பானவை, உத்திரவாதமானவை,
சேர்வீஸ் செய்யவேண்டியதில்லே.

சீமென்ஸ் வீட்டு மின்சாரக் கம்பிகள்
சி. ரி. எஸ். 1/044 — 250 வோல்ட் இனம்.
கறுப்பும் சிவப்புமான உட்கம்பிகள்
3 படையான இன்ஸுலேஷன்
கூடிய பாதுகாப்புக்காக
பி. எஸ். எஸ். 7/1953க்கு செய்யப்பட்டது.

உற்பத்தியாளர்:
**சீமென்ஸ்-ஷுக்கேட்வேக் ஏ. ஜி.**
எர்லாங்கன், ஜெர்மனி.

*Sole Agents:*
**Freudenberg & Co., (Ceylon) Ltd.**
13, LLOYDS BUILDING PRINCE ST.
COLOMBO - 1.
Phones: 7121, 7122, 78825.

உப-ஏஜென்ட்ஸ்:
**ஓட்டோஸ் லிமிட்டெட்**
யாழ்ப்பாணம்.
போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்

## இந்தியருக்கு எதிராக நடைபெறும் தேர்தல் பிரசாரம்

—நமது நிருபர்—

நாளுக்கு நாள் நாட்டிலே தேர்தல் ஜுரம் அதிகரித்து வரும் பொழுது, வகுப்பு வாதமும் இன வெறியும், ஆங்காங்கே கூட்டங்களில் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. மற்றக் கட்சிகள் என்ன செய்யவில்லே என எல்லோரும் பேசிக்கொண்டு வரும் பொழுது, சில இடது சாரிகள் இங்கு நிரந்தரமாக வசிக்கும் எல்லா இந்தியருக்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டும் எனக் கூறுவதால் அவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது என கம்பளேயில் நடந்த ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலே, ஐக்கிய தேசியக் கட்சியின் தலேவர் திரு. டட்லி சேனநாயக்கா கூறியுள்ளார். மலேநாட்டிலே சிங்களவரும் தமிழரும், நாட்டின் வேறெந்தப் பகுதியிலும் இல்லாதவாறு இங்கு ஒருமைப்பட்டிருக்கின்றனர். 1958ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரங்களின் போதும்கூட, இந்தப் பகுதிகளில் மட்டுந்தான், சம்பவங்கள் மிகவும் குறைந்திருந்தன.

இங்கு கிராமங்களிலும், தோட்டங்களிலும் தமிழரும் சிங்களவரும் கலந்து உறவாடி தங்களுக்குள்ளே ஒருவித ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இந்த ஒற்றுமையையும், அமைதியையும் கலேக்கு முகமாகவே இப்பொழுது இப்புதிய பிரசாரங்கள் தலேதூக்கி வருகின்றன. கிராமங்களில் வாழும் சிங்கள மக்களின் வாக்குகளேப் பெறுவதற்காக இந்திய வம்சாவளியினருக்கும் பொதுவாகத் தமிழருக்கும் எதிராக மேடைகளிலே பேசி மக்கள் மனதை மாற்ற முயல்கின்றனர். கண்டிப் பிரதேசத்திலே சிங்கள விவசாயிகளின் இன்றைய பரிதாபமான நிலேக்கும் தமிழர்களே காரணம் என்ற விஷமப் பிரச்சாரமும் இப்பொழுது தலே தூக்குகின்றது.

### பழைய பல்லவி

மற்றெரு பக்கத்திலே, திரு. கே. எம். பி. இராஜரத்ன, இரியகொல்லே போன்ற வகுப்புவாதப் பிரமுகர்கள் மீண்டும் தங்கள் பழைய பல்லவியைப் பாடுகின்றனர். "ஈழநாடு" குறிப்பிட்டிருந்தது போல வகுப்பு வாதம் வானெலியிற்கூட இடம் பெற்றது. லங்கா சமசமாஜக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் ஒலிபரப்புகளேக் கட்டுப்படுத்திய பிரதமர் காதில், கே. எம். பி. போட்ட இனவெறிக் கூச்சல் ஏனே கேட்கவில்லே.

பிலிப்குணவர்த்தன,மற்றெரு பக்கத்திலே, திரு. மெத்தானந்தாவுடன் சேர்ந்து கச்சை கட்டுகின்ருர். இவர்கள் கண்ணிலும் இலங்கையின் குறை

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# இதுவரைபட்ட இன்னல் போதும்

### தமிழினம் இனியும் ஏமாறக் கூடாது

மண்டைதீவு நேயர் திரு. தி. பஞ்சாட்சரம் 'ஈழநாடு' 16-1-60 இதழில் "தமிழினத்தை ஒன்றுபடுத்த ஒரே வழி" என்ற தலைப்பில் எழுதிய கடிதத்தைப் படித்ததும் அழுவதா, சிரிப்பதா என்றுதான் எனக்குத் தோன்றியது. தமிழரின் அரசியல் வாழ்க்கை இவ்வளவு கீழான நிலைக்கு வந்ததை நினைக்கும்பொழுது ஆற்றொணாத் துயர் அடையவேண்டியிருக்கிறது. தமிழினம் ஒன்றுபட வேண்டுமென ஆவல்படுவதை நாம் வரவேற்கும் அதே வேளையில் தாம் போற்றும் கட்சியின் செல்வாக்கை அதிகரிப்பதன்மூலம்தான் அவ்வொற்றுமை உண்டாகும் என்று வலியுறுத்துவதையும், அந்த நோக்கத்தை அடைவதற்கு சரித்திரத்திற்கு முரண்பாடானதும், உண்மையற்றதுமான பிரசாரத்திலும் ஈடுபடுவதையும் நாம் வன்மையாகக் கண்டித்து எழுதாமல் இருக்கவே முடியாது. தமிழினத்தை ஒன்றுபடுத்த யோசனை கூறும் பஞ்சாட்சரம் போன்ற நேயர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். "தங்களது இலட்சியம் சிறந்ததுதான். ஆனால் தங்கள் இலட்சியத்தை அடையத் தாங்கள் பிரச்சினைக்குரிய முறைகளைக் கையாளுகிறீர்கள். இன்றேல் தங்களுக்குப்போதிய அரசியலறிவு இல்லை."

"ஒற்றை ஆட்சியை எதிர்த்துத் தமிழினத்துக்குச் சுயநிர்ணய உரிமை பெறவேண்டும் என்ற குறிக்கோளோடு' தமிழ்க் காங்கிரஸ் உருவாகியது" என்று இவ் வாசகர் எழுதும்பொழுது இவ் "உண்மையை" எந்தச் சரித்திர நூலிலிருந்து கற்றார் என்ற கேள்வி பிறக்கின்றது. இது ஓர் அண்டப் புழுகு. ஆகாயப் புழுகு. தமிழ்க் காங்கிரசைத் தோற்றுவித்த சந்தர்ப்பங்கள் வேறு. தமிழ்க் காங்கிரஸ் இலங்கையின் சட்ட சபையிலே பெரும்பான்மை மக்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் சம பல பிரதிநிதித்துவம் (Balanced Representation) கோரியதேதவிர ஒற்றையாட்சியை ஒழித்துவிட வேண்டுமென்று என்றுமே கோரியதில்லை, அத்துடன் இக் கட்சி காபினெட் அரசியலமைப்பு சிறுபான்மை மக்களுக்கு உதவாது என்றும் வாதாடி வந்தது.

தமிழ்க்காங்கிரஸின் அன்றைய இலட்சியம் சரியா, பிழையா என்பது வேறு. அக் கொள்கையையும் இலட்சியத்தையும் உண்டாக்கிய பொறுப்பு திரு. ஜி. ஜி.யைத் தவிர மற்றும் திரு. செல்வநாயகம், திரு. சிவசுப்பிரமணியம், டாக்டர் நாகநாதன், டாக்டர் பரமநாயகம் போன்றவர்களுக்கும் உரித்தாகும். இன்று இவர்கள் தப்பித்துக்கொள்ள முயற்சிப்பது வியப்பாக இருக்கிறது.

சமஷ்டிக் கட்சி, "கொள்கை, குறிக்கோள் என்பவற்றை மதித்து நடக்கிறது" என்று பெருமிதம் கொள்ளும் திரு. பஞ்சாட்சரம் இக் கட்சியின் கடந்தகால சரித்திரத்தை ஏன் ஞாபகமூட்டிப் பார்க்க மறுக்கிறார். தமிழுக்கும் சிங்களத்துக்கும் சரி சம அந்தஸ்து வேண்டுமென்று 1956ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின்போது ஓலமிட்டு, பின் திருமலை மாநாட்டில் சமஷ்டி அரசியலைப் பெறுவதுதான் எமது குறிக்கோள் என்றார்கள். அத்துடன் நின்றார்களா? சிங்களம் மட்டும் மசோதா விவாதிக்கப்பட்ட பொழுது காலஞ்சென்ற திரு. வன்னியசிங்கம் பார்லிமெண்டில் என்னதான் சொன்னார். "சமஷ்டி அரசியலமைப்புக்கு தாங்கள் ஒப்புக்கொண்டால், நாம் சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொள்கிறோம்" என்று சொன்னார். ஈழத்தின் எப்பகுதிகளிலும் இரு மொழிகளும் சம உரிமையுடன் வாழவேண்டுமென்ற இவர்கள் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் 'ஸ்ரீ' யுடன் சிங்கள 'ஸ்ரீ' யையும் சேர்க்க மறுத்து சிங்கள மக்களின் ஆத்திரத்தைத் தூண்டித் தமிழ் மக்களைச் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு ஆளாக்கவில்லையா?

இன்று தமிழினம் வேண்டி நிற்பது கட்சிகளை அன்று, அதன் உரிமைகளையே. ஆகவே தமிழினம் ஒன்றுபட வேண்டுமானால் தலைவர்கள் எனப்படுவோர் சுயநலத்தை அடக்கிப் பொது நலத்துக்காகப் பாடுபடவேண்டும். இந்த உயர்ந்த நோக்கம் எமது தலைவர்களிடம் இல்லாதது எமது சாபக்கேடாம். எமது தலைவர்கள் ஏன் ஒன்றுபட முடியாது. திரு. ஜி. ஜி. யும், திரு. சுந்தரலிங்கமும், யு என். பி. அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தது குற்றமென்றால், அதைத் தூற்றித்திரிவது தான் சமஷ்டிக் கட்சியின் இலட்சியமென்றால், முதலியார் காரியப்பர், எஸ். எம். இராசமாணிக்கம் போன்றோர் யு. என். பி. யில் இருக்கவில்லையா? காலஞ்சென்ற திரு. வன்னியசிங்கம், திரு. ஜி. ஜி. யின் மூலம் தமிழ் காங்கிரஸ் அபேட்சகராக அறிமுகப்படுத்துவதற்கு முன் யு. என். பி. யில் இருக்கவில்லையா? நேற்றுவரை திரு. எம். பாலசுந்தரம், திரு. ஜி. ஜி. யின் வலது கையாக இருக்கவில்லையா? அப்படியானால் இவர்கள் செய்யாத குற்றங்களையா ஜி. ஜி. யும், சுந்தரரும் செய்துவிட்டார்கள்.

தமிழினம் இனியும் ஏமாறக் கூடாது. நாம் பட்ட இன்னல்கள் போதும். நாம் எமது உரிமைகளைப் பெறக்கூடிய சூழ்நிலைகள் இன்று இந்நாட்டில் இல்லை. ஆகவே தமிழராகிய நாம் சிங்கள மக்களுடன் சேர்ந்து, அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டக்கூடிய ஓர் அரசியல் கட்சிக்காக எமது ஆதரவைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். சிங்கள மக்களிடையே இந்த விழிப்புணர்ச்சி ஏற்கனவே தோன்றிவிட்டது. தமிழருடன் சினேக மனப்பான்மையுடன் வாழவேண்டுமென்ற ஆவலும் தோன்றிவிட்டது. இந்த மனமாற்றம் நல்ல பலன்களை எமக்குத் தரவேண்டுமென்றால் நாமும் அமைதியையும், சமாதானத்தையும்; நல்லுறவையும் வளர்க்கக்கூடிய சக்திகளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். இத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பம் உதயமாகும்வேளை அடுக்கு மொழி வீரர்களையும், ஏட்டுப் படிப்பாளரையும் கண்டு நாம் ஏமாறாமல் எமது பகுத்தறிவுக்கு வேலையைக் கொடுத்தல் அவசியமாம். அமைதி, சமாதானம், நல்லுறவு இவை தாம் இன்று தமிழினத்திற்கு அவசியம். அந்த நல்லுறவை வளர்க்க யு. என். பி. சிறந்ததா, சமசமாஜக்கட்சி சிறந்ததா, இன்றேல் சமஷ்டிக்கட்சியும், தமிழ்க் காங்கிரஸும் சிறந்தனவா என்பதை தமிழ்ப் பெருமக்களே நிர்ணயிக்க வேண்டும். வசை மொழிகளுக்கும் பழைய பல்லவிகளுக்கும் இனியும் இடங் கொடுக்கலாகாது.

பொ. சிறீஸ்கந்தராஜா.
26, மில் வீதி,
கோட்டடித்தெரு,
கொழும்பு.


**விற்பனைக்கு**

சகல வசதிகளுமுள்ள வீடும், நல்ல வருமானத்தோடு கூடிய 10 பரப்பு நிலமும் சண்டிலிப்பாய் வடக்குமூலையில் விற்பனைக்கு இருக்கின்றது.

விபரங்களுக்கு:-
**பொன். பாலச்சந்திரன்**
20, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.


# பிரதிநிதித்துவமற்ற 10 லட்சம் மக்கள்

## அவர்களின் கதி என்ன?

ஒற்றுமை சிதறுண்டதன் காரணமாக இந்திய பரம்பரையினராகிய நம் சமுதாயமும் தோட்டத் தொழிலாளரும் இன்று மனித உரிமையற்றவர்கள் என்ற நிலையை அடைந்துள்ளனர். இவ்வாறு ஜனாப் ஏ. அஸீஸ் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் கூட்டமொன்றிற் பேசினார். இக் கூட்டம் கொழும்பு மெயின் வீதியிலுள்ள உதவி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

ஜனாப் அஸீஸ் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது: ஒற்றுமை சிதறுண்டதன் காரணமாக இந்திய பரம்பரையினராகிய நம் சமுதாயமும், தோட்டத் தொழிலாளரும் இன்று மனித உரிமையற்றவர்கள் என்ற நிலையை அடைந்துள்ளனர். பாராளுமன்றத்தில் தோட்டத் தொழிலாளர்களின் நிலையையும், இந்திய வம்சாவளியினரின் குறைபாடுகளையும் எடுத்துக் கூறுவதற்கு ஒருவருமில்லை. நீதி நியாயத்தையும், மனித தர்மத்தையும் பார்லிமெண்டில் எடுத்துக் கூறுவதற்கு முற்போக்குக் கட்சிகள் கூட பயப்படுகின்றன. ஏனெனில் ஜாதிய தீவிரவாதிகளினது கோபத்திற்கு ஆளாகநேருமோவென்று பயப்படும் நிலைமைக்கு இலங்கையில் அரசியல் இன்று வந்துள்ளது. இந்திய வம்சாவளியினருக்காக ஒதுக்கப்பட்டிருந்த நாலு ஸ்தானங்களைக் கூட அரசாங்கம் எடுத்துவிட்டபோது அதை அரசியல் சாத்திர ரீதியில் முற்போக்குக் கட்சிகள் வரவேற்றனவே தவிர 10 லட்சம் மக்களின் பிரதிநிதித்துவம் ஜாதிய வாதிகளினால் பறிக்கப்படுகிறதே என்பதையிட்டு யாரும் கவலைப்படவில்லை. அதற்கு மாற்று வழிகளையும் கூறவில்லை.

### தனித் தொகுதி முறை

ஜனநாயகத்தையும் மனித பண்பாட்டையும் நிலை நிறுத்துகின்ற இந்தியாவில் சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காகவே இந்திய அரசியல் திட்டத்தில் தனித் தொகுதி முறை இடம் பெற்றுள்ளது. இப்போது இந்திய அரசாங்கம் 10 வருடங்களுக்கு இந்தத் தனித் தொகுதி முறை இருக்க வேண்டும் எனத் தீர்மானித்துள்ளது, 1952-ம் வருடத்திலே நம் வாக்குரிமையைப் பறித்தபோது நமது ஆட்சேபணையைத் தெரிவிப்பதற்காக நாம் நடத்திய உண்ணாவிரத சத்தியாக்கிரகத்தின் போது இன்று முற்போக்கு நியாயம் வழங்குவோம் என்று கூறுகின்ற முற்போக்கு வாதிகள் ஒரு வார்த்தை கூட அநுதாபமாகப் பேசவில்லை. ஏனெனில் அப்படிக் கூறினால் ஆளும் கட்சியார் இந்த முற்போக்கு வாதிகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து விடுவார்களென்று பயந்ததே அதற்குக் காரணம். எனவே, இந்நாட்டு முற்போக்கு வாதிகள் எனப்படுவோர் நமக்கு நன்மை செய்வார்கள் என்று கருதினால்

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஹரிஜன மாணவ சகாயநிதி ஒழுங்குகள் திருத்தி அமைக்கப்படும்

மகாத்மாகாந்தி ஞாபகார்த்த ஹரிஜன மாணவசகாய நிதி என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிதியின் பெயரால் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கல்லூரிகளிலும், அரசினர் கல்லூரிகளிலுமாக 18 மாணவ, மாணவிகள் உதவி பெற்று வருகின்றனர்.

இந்த உதவி பெற்றுக் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குள் எஸ். எஸ். ஸி. இல் போதிய திறமைகாட்டிப் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்குப் படிக்க விரும்புகிறவர்களில் திறமைசாலிகளுக்குப் பல்கலைக்கழக கல்விவரை உதவுவதாகவும் நிதிப் பொறுப்பாளர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

இந்த நிதியின் பெயரால் வருடந்தோறும் கொக்குவில் ஸ்ரீ ராம கிருஷ்ண சைவ வித்தியாசாலையில் கல்வி கற்கும் ஹரிஜன மாணவர்களுக்கு அவர்கள் தகுதி நோக்கி உதவிகள் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இவ்வித்தியாசாலையிலிருந்து இவ்வுதவி பெற்று எஸ். எஸ். ஸி. பரீட்சையில் திறமையுடன் சித்திபெறும் மாணவருக்குப் பல்கலைக்கழகப் படிப்புக்கு உதவுவதாகத் தீர்மானிக்கப்பட்டு இவ்வருடம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்போது கல்வி கற்கும் 18 மாணவர்களின் அனுபவங்களைக் கொண்டு எதிர் காலத்தில் சகாயம் வழங்கும் ஒழுங்குகள் திருத்தி அமைக்கப்படும். அதுவரை புது மாணவர்கள் எடுக்கப்படமாட்டார்கள் என, சகாய நிதிச் செயலாளர் தெரிவிக்கின்றார்.


**பயிர், செடிகளுக்குண்டாகும்**
**சகல வியாதிகளையும் நிச்சயமாகத் தடுப்பது**

# பொலிடோல்

யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பவர்கள் :
கே. எஸ். செல்லையா
**ரோயல் டிஸ்பென்சரி**

ஏகவிநியோகஸ்தர்கள் :
**சதாம் ஹவுஸ் லிமிடெட்**
தபாற் பெட்டி இல. 743. கொழும்பு.
சகல தகவல்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

# ஸைக்கிளில் இருவர் செல்லத் தடை

## பிரதமருக்கு மாணவர் விண்ணப்பம்

ஸைக்கிள் வண்டிகளில் இருவர் ஏறிச் செல்வதைத் தடுக்கும் சட்டத்தை எடுத்துவிடும்படி யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள 71 கல்லூரிகளில் கல்வி கற்கும் 2400 மாணவர்கள் பிரதம மந்திரிக்கு விண்ணப்பம் செய்திருக்கிருர்கள். இவர்கள் அனுப்பிய பெட்டிசத்தின் பிரதிகள் நீதிமந்திரி, தலதாபன மந்திரி, பொலிஸ் பகுதித் தலைவர், தலதாபன கமிஷனர், யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிறிண்டென்ட் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இது விஜயத்தில் மிகவும் அக்கறை காட்டி வரும் தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். ஸ்ரீ பாஸ்கரன், பிற நாடுகளில் இந்தப் பிரச்சினை எவ்வாறு கையாளப்படுகிறதென்றும் தகவல் தெரிவித்துள்ளார். யூகோஸ்லாவியா, இந்தோனேஷியா, ஒல்லாந்து ஆகிய நாடுகளில் சைக்கிளில் இருவர் ஏறிச் செல்வது சட்ட பூர்வமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. சென்னை இராச்சியத்தில் நகர எல்லைகளுக்கப்பால் இது அனுமதிக்கப்படுகிறது. இஸ்ரவேல், ஸ்விற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் இருவர் ஏறிச் செல்வதற்காக சைக்கிள்களில் விசேஷ ஆசனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கையிலுங்கூட, சில இடங்களில் (உதாரணம்: ஊர்காவற்றுறை) ஒருசைக்கிள்மீது இருவர் சவாரி செய்யலாம்.

மேலேயுள்ள தகவல்களையும் கொடுத்து, யாழ்ப்பாணத்தில் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையினுல் பள்ளிக்கூட மாணவர்கள், அதிலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், இருவர் சவாரி செய்வதைத் தடுக்கும் சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்படுகிருர்கள் என்றும், இச்சட்டத்தை முற்ருகவே எடுத்து விடாவிட்டாலும், மாணவர்களுக்கு சாதகமான முறையில் அதில் சில பல மாற்றங்களைச் செய்யலாமென்றும் திரு. பாஸ்கரன் பிரதம மந்திரிக்கு எழுதியுள்ளார்.

# அரிசி விலை 25 சதமாகும்

## சமசமாஜ அரசாங்கம் வந்தால்

லங்கா சமசமாஜக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறுமாயின் அது செய்யும் முதல் வேலை அரிசி விலையை 25 சதமாகக் குறைப்பதே, என்று சுளிபுரத்தில் நடந்த தேர்தல் கூட்டமொன்றில் டக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா கூறினுர். சமசமாஜக் கட்சி இந்நாட்டைப் பீடித்துள்ள பொருளாதாரப் பிணிகள் யாவற்றையும் மூன்றே மூன்று வருடங்களில் அறவே போக்கடித்து, எல்லோருக்கும் வேலை தேடிக் கொடுக்கும் வகை செய்யுமென்றும் அவர் கூறினுர்.

"19 ஸ்தானங்களில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அத்தனையையும் வென்ருலும் கூட அரசாங்கம் அமைக்க முடியாது. அதுபோலவே தமிழ் காங்கிரசும் கொம்யூனிஸ்ட் கட்சியும். சமசமாஜக் கட்சி வடக்கில் 11 ஸ்தானங்கள் உட்பட இலங்கை முழுவதிலும் 101 ஸ்தானங்களில் போட்டியிடுகிறது. ஆகையால் நீங்கள் வாக்குக் கொடுக்கப் போகும் கட்சிகளில் இது ஒன்றுதான் அரசாங்கம் அமைக்கக் கூடிய வல்லமை உள்ளது. அரசாங்கம் அமைக்க வல்ல மற்றக் கட்சிகளாகிய யூ. என். பி. யும் எஸ். எல். எவ். பி. யும் வட மாகாணத்தில் ஒரு அபேட்சகரையாவது நிறுத்தவில்லை," என்றும் டக்டர் கொல்வின் சொன்னுர்.

சென்ற வாரத்தில் சமசமாஜக் கட்சி தலைவர்களான டக்டர் என். எம். பெரேராவும் டக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, வேலணை முதலிய பல இடங்களில் தங்கள் கட்சி அபேட்சகர்களை ஆதரித்து கூட்டங்களில் பேசினர்.

மொழியைப் பொறுத்தளவில் சமசமாஜக் கட்சி தனது 1956-ம் வருடத்தைய கொள்கையாகிய சம அந்தஸ்திலிருந்து அணுவளவேனும் பிறழவில்லையென்று டக்டர் என். எம். யாழ்ப்பாணக் கூட்டமொன்றில் சொன்னுர். இக் கூட்டத்தில் தான், ஒருவர் டக்டர் பெரேராவின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, உங்களால் தான் எங்களைக் காக்க முடியுமென்று புலம்பினுர்.

# முக்கிய அறிவிப்பு

கட்டுரை, கதை அனுப்புவோர் 'ஆசிரியர், 'ஈழநாடு' என்றும்; செய்திகள், ஆசிரியர் கடிதங்கள் அனுப்புவோர் 'செய்தி ஆசிரியர், 'ஈழநாடு' என்றும்; சந்தா, விளம்பரம், பத்திரிகை விநியோகம் சம்பந்தமாக அனுப்புவோர் 'மனேஜர், 'ஈழநாடு' என்றும் முகவரி இடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சினிமாப் பகுதி, விளையாட்டுப் பகுதி முதலியன சம்பந்தமான விஷயங்களை அனுப்புவோர் தங்கள் கடிதத்தின் மேலுறையில் தெளிவாக இன்ன விஷயமென்று குறிப்பிட்டு ஆசிரியரின் முகவரிக்கு அனுப்புதல் நலம்.

ஈழநாடு
தபாற் பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம்.

# மலர் தூவப்பட்டதல்ல

## தமிழரசுக் கட்சி காட்டும் வழி

—ஏ. அமிர்தலிங்கம்

"தமிழரசுக் கட்சி காட்டும் வழி மலர் தூவப்பட்டதல்ல. அது மிகவும் கரடு முரடானது. ஆயினும் அதைப் பின்பற்றினுல் தான் இழந்த சுதந்திரத்தையும் உரிமைகளையும் திரும்பப் பெறலாம்." இவ்வாறு வட்டக்கச்சியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி தேர்தல்கூட்டமொன்றில் முன்னுள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினுர்.

சிங்களவர் தினமும் தமிழ்ப் பிராந்தியங்களை ஆக்கிரமிக்கிருர்கள். பரம்பரை பரம்பரையாகத் தமிழர் வாழ்ந்த நிலங்கள் அரசாங்கம் கடைப்பிடிக்கும் குடியேற்றத் திட்டக்கொள்கைகளால் ஒவ்வொன்ருக பறிமுதல் செய்யப்படுகின்றன. தமிழ் மொழி தன் உரிய ஸ்தானத்தை இழந்து பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஆயினும் தமிழர் அதற்கு ஒரு குறைவான அந்தஸ்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினுர்.

யாழ்ப்பாணம், வதிரி, பருத்தித்துறை முதலிய இடங்களிலும் தமிழரசுக் கட்சி கூட்டங்கள் நடைபெற்றன.

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

பொதுத்தேர்தலில் இம்முறை சுயேச்சையாகப்போட்டியிடுவோரின் தொகை மிக அதிகமாக இருக்கின்றது. இந்தச் சிறிய நாட்டில் இருபதுக்கு மேலான அரசியற் கட்சிகள் இருந்தும் அதில் ஒரு கட்சியேனும் இந்தச் சுயேச்சை அபேட்சகர்களுக்குப் பிடிக்கவில்லையா? என்று பலர் கேட்பது காதுகளில் எட்டுகின்றது. இது ஒரு தகுந்த கேள்விதான். நேற்று முன் தினம் சுயேச்சையாகப் போட்டியிடும் ஒரு பெரியாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

"ஐயா எதற்காகத் தாங்கள் இப்படி ஒரு கட்சியிலும் சேராது தனித்து நின்று போட்டியிடுகின்றீர்கள்? தனி மரம் தோப்பாகாது என்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே. ஏதேனும் ஒரு கட்சியிற்சேர்ந்து தங்கள் ஆசையை நிறைவேற்றியிருக்கலாமே" என்று நான் ஒரு போடு போட்டேன்,

அதற்கு அவர் சொன்னுர்: "நீர் கூறுவது சரிதான். ஆனுல் எனக்கு இந்த இருபத்து மூன்று கட்சிகளிலும் ஒன்றேனும் பிடிக்கவில்லை. தான்சாக யார் மருந்து குடிப்பார்கள்! எனது சொந்தக் கருத்தின்படி இந்தக் கட்சிகளின் போக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை" என்று. இதைப்பற்றி எனது நண்பர் ஒருவருடன் பேசியபோது அவரும் அந்தச் சுயேச்சை அபேட்சகரின் கூற்றிலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றதென்ற முடிவுக்கு வந்துள்ளார். யார் எதைக் கூறினுலும் சுயேச்சை அபேட்சகர்கள் ஓரளவு விட்டுக் கொடுத்து மக்களின் மதிப்பைப் பெற்றுள்ள ஒரு கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு அமைந்து போட்டி யிடுவதே விரும்பத்தக்கது. அரசியற் கட்சிகளும் நாட்டுக்கு நற்பணி செய்யக்கூடிய பெரியார்களை ஒருமாதிரித் தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டால் எத்தனையோ மண்டையிடியைத் தீர்த்திருக்கலாம். இப்படி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருப்பின் இன்று நாட்டில் எத்தனையோ காரியங்களைச் சுலபமாகச் சாதித்து விடலாமே!

## ஒரு விசித்திரம்

சுயேச்சையாகப் போட்டியிடுபவர்களைப் பற்றிப் பேசும் போது வேருெரு விசித்திரமான விஷயம் நினைவுக்கு வருகின்றது. ஏற்கனவே சில கட்சிகளிற் சேர்ந்தவர்கள் தங்களை அபேட்சகர்களாக நியமிக்கவில்லை யென்பதைக் கண்டு சுயேச்சையாகப் போட்டியிடத் தீர்மானித்தது நூதனமல்ல. இவர்களிற் சிலர் அதே கட்சியைச் சேர்ந்த சுயேச்சை அபேட்சகர்கள் என்று சொல்லிக்கொண்டு போட்டியிடுவது தான் மிக விசித்திரமானது. வடபகுதியில் மாத்திரமல்ல. தென்னிலங்கையிலும் இத்தகைய பேர்வழிகள் வரிந்து கட்டிக் கொண்டு போட்டியிடுகின்றனர். இச்செயல் அவர்களின் சுயநலப் போக்கை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது. கட்சியோ, கொள்கையோ அவர்களுக்குப் பெரிதல்ல. அன்றேல் நாட்டின் நல்வாழ்விற்கூட அவர்களுக்கு அக்கறை கிடையாது. தமது சொந்த ஆசையைப் பூர்த்தி செய்வதுதான் அவர்களின் கொள்கை. சுருங்கக் கூறின் இவர்களின் கட்சி 'சுயநலக் கட்சி' யாகும்.

## 'மிகப் பழைய விளக்குமாறு'

இப்படி எல்லாம் எழுதும் போது இராஜாஜியைப் பற்றியும் அவரது சுதந்திரக் கட்சியைப் பற்றியும் பலரும் பல விதமாகப் பேசுவதை இங்கு குறிப்பிடாதிருக்க முடியவில்லை. சில தினங்களுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் நேருஜி, இராஜாஜியைப் பத்தொன்பதாம் நூற்ருண்டுப் பேர்வழியெனக் கூறியிருந்தார். இதனைக் கேட்டு இராஜாஜி சீறிச் சினக்கவில்லை. அவர் இன்னும் ஒரு படி கீழே இறங்கித் தாம் கிறிஸ்துவுக்கு முன், அதாவது, வள்ளுவர் காலத்தைச் சேர்ந்தவர் எனக் கூறியிருக்கின்ருர். பிரதமர் நேரு புதிய விளக்குமாறுகளைப் பற்றியும், பழைய விளக்குமாறுகளைப் பற்றியுமே எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கின்ருர் எனக் கூறிய இராஜாஜி, தாம் ஒரு பழைய விளக்குமாறு என்பதை நினைவூட்டி வைத்தார். புதுமையை இராஜாஜி புறக்கணிக்கவில்லை. ஆனுல் பழமையிலும் எவ்வளவோ சிறப்பு இருக்கின்றதென்பது அவருடைய நம்பிக்கை. தமது புதிய சுதந்திரக் கட்சியும் பழமையின் நற்பண்புகளையே வற்புறுத்தி வருகின்றதெனவும் அவர் விளக்கி வைக்கத் தவறவில்லை.

விளக்குமாறுவீட்டையும்வெளியையும், வீதிகளையும் துப்புரவாக்க உதவுகின்றது. தனது பணி முடிவடைந்ததும் பிறர் கண்களிற் படாமல் ஒரு மூலையிற் போய் தன்பாட்டில் ஒதுங்கி விடுகின்றது. இராஜாஜியும் அரசியற் குப்பை கூளங்களைக் கூட்டித் தள்ளி அப்புறப்படுத்திய பின்னர் தன்பாட்டில் ஆறுதலாக இருந்து கொள்வார் போலும். இதனை விளக்குமாறு அவர் நடந்து கொள்ளும் விதம் நேருஜி உட்படப் பல தலைவர்களுக்கு ஒரே புதிராகவேயிருக்கின்றது!

# கலப்பு மணங்கள் வகுப்பு வாதத்தைக் குறைக்கும்

## ஐக்கிய நாடுகள் பிரதிநிதி பேச்சு

1949இல் தாம் அஸ்திவாரக் கல் நாட்டிய காங்கேசன் துறை சீமந்து தொழிற்சாலைக்கு சென்ற வாரம் விஜயம் செய்த சேர் குளோட் கொரயா, தமிழரும் சிங்களவரும் கலப்பு மணங்கள் செய்து கொண்டால் வகுப்பு வாதத்தை ஒழித்து விடலாமென்று கூறினுர். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் கூட்டத்தில் அவர் பேசிய போது மேற்சொன்ன யோசனையை யாழ்ப்பாண வாலிபர்களுக்கு கூறிவிட்டு, ஓர் இனம் மற்ற இனத்தையும் தாங்கிப் பிடித்தால்தான் இரண்டும் முன்னேற வழியுண்டென்றும், சர்வதேச உறவிலும் இதுதான் உண்மை என்றும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாயிருக்கும் சேர் குளோட் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. ஹன்டி பேரின்பநாயகம் பேசுகையில், பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுத்துநடத்தவேண்டுமென்று கூறித் திரிபவர்கள் சிறந்த கல்லூரிகளிலேயே கண் வைத்திருக்கிருர்களொழிய ஆரம்பப் பள்ளிக்கூடங்களைப் பற்றிக் கவனிப்பார் யாருமில்லை என்று சொன்னுர்.

# யாழ்ப்பாணத்தில் இருள் சூழ்ந்தது!

சென்ற புதன்கிழமை பிற்பகல் பெய்த கடும் மழையின் விளைவாக அன்றிரவு முழுவதும் யாழ்ப்பாணம் அந்தகாரத்தில் அமிழ்ந்தது. சுன்ஞகம் மின்சார நிலையத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு பிற்பகல் நாலரை மணியளவில் துண்டிக்கப்பட்ட மின்சார விநியோகம் அடுத்தநாள் 7 மணிவரை திரும்பவேயில்லை. சினிமாக்களில் 'மாட்டினி'பார்த்தவர்கள் எல்லோரும் அரைவாசிப் படத்தைப் பார்த்துவிட்டு வீடு திரும்பினர்.

இரண்டு மூன்று நாட்டள் பெய்த நல்ல மழை நெல் விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறது. நெல் விளைந்துவரும் நேரத்தில் இந்த மழை மிகவும் விரும்பத்தக்கது.

# கல்லூரி அதிபர் பதவி நீக்கம்

தைப்பொங்கல் விடுமுறைக்குப் பின்னர் காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரி சென்ற திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாயிற்று. ஆனுல் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லவில்லை. கல்லூரி அதிபர் திரு. ஏ. மார்க்கண்டன் அதிபர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே மாணவர்கள் கல்லூரி செல்ல மறுத்து நிற்கின்றனர்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

புதிய தேர்தல் தொகுதிகள்:

# மத்திய மாகாணம்

— பொ. கிருஷ்ணசுவாமி —

### தொகுதி இல: 42 கண்டி

எல்லைகள்: வடக்கில் அரிஸ்பத்து பிரிவு, கிழக்கில்: கண்டி மாநகரசபையின் எஞ்சிய பகுதிகள். தெற்கில், உடபலாத்த பிரிவின் எஞ்சிய பகுதிகள். மேற்கில்: அரிஸ்பத்து, யட்டினுவர, உடுனுவர பகுதிகள்.

கங்கவத்த கிராமச்சங்க வட்டாரம், கண்டி மாநகரசபையின் ஒரு பகுதி, கந்துகாரபாகல கிராமச்சங்க வட்டாரம், ஆகியவை இதன் பிரிவுகள்.

இத். தொகுதியில் வாழும் 56,500 பேரில் 48,400 வாக்காளர் உளர். இவர்களில் 33.0% மேல்நாட்டுச்சிங்கள்வர், 29.0% கரையோரச்சிங்கள்வர், தமிழர் 8.0%. சோனகர் 10.0%. ஏனையோர் 20.0%. பௌத்தர் 57.3%, இந்துக்கள் 17.3%, இஸ்லாமியர் 12.8%, கிறிஸ்தவர் 12.3%.

### தொகுதி இல:43 செங்கடகல

எல்லைகள்: வடக்கிலும் கிழக்கிலும் பாத்த தும்பர பிரிவு, தெற்கில், கண்டி பாத்த ஹேவாஹெட்ட பிரிவுகளின் எஞ்சிய பகுதிகள். மேற்கில், கண்டி மாநகரசபையின் மீதிப் பகுதிகள்.

கந்தகே வடக்கு கிராமச் சங்க வட்டாரத்தின் ஒரு பிரிவு, கண்டி மாநகரசபை வட்டாரத்தின் ஒரு பிரிவு ஆகியவை இதன் பகுதிகள். இங்கு வாழும் 49,100 பேரில் 43,200 பேர் வாக்காளர்கள். இவர்களில் மேல்நாட்டுச் சிங்களவர் 36.9%, கரையோரப்பகுதிச் சிங்களவர் 32.7%, இலங்கைத் தமிழர் 6.4%, சோனகர் 8.7%, ஏனையோர் 15.3%, பௌத்தர்கள் 64.6%, இந்துக்கள் 11.1%, இஸ்லாமியர் 11.8%, கிறிஸ்தவர் 12.3%.

### தொகுதி இல : 44: குண்டசாலை

எல்லைகள்: வடக்கில், பாத்த தும்பரப் பிரிவின் எஞ்சிய பாகங்கள். கிழக்கில், பாத்த தும்பரப் பிரிவு, நுவரெலியா மாவட்டத்தின் பகுதிகள். தெற்கிலும் மேற்கிலும், கண்டி, பாத்த ஹேவாஹெட்ட பிரிவுகள்.

சேர்ந்துள்ள பகுதிகள்: பள்ளே கம்பஹா, உடகம்பஹா, பலிஸ்பத்து மேற்கு ஆகிய கிராமச்சங்கங்களின் பிரிவுகள்.

இங்கு வாழும் 45,000 பேரில் 42,500 வாக்காளர். இவர்களில் மேல்நாட்டுச் சிங்களவர் 79.0%, கரையோராப்பகுதியினர் 9.7%, இலங்கைத் தமிழர் 2.0%, சோனகர் 3.5%, ஏனையோர் 5.8%. 89.7 பௌத்தர்கள், 5.4% இந்துக்கள், 3.8% இஸ்லாமியர், 1.0. கிறிஸ்தவர்.

### தொகுதி இல:45 தெல்தெனியா

எல்லைகள்: வடக்கில்: பாத்த தும்பர, உட தும்பர பகுதிகளின் எஞ்சிய பாகங்கள். கிழக்கில்: உட தும்பர பிரிவின் ஒருபகுதி. தெற்கில்: நுவரேலியா மாவட்டம். மேற்கில்: நுவரேலியா மாவட்டமும் பாத்த தும்பரப் பிரிவின் எஞ்சிய பகுதிகளும்.

சேர்ந்துள்ள பகுதிகள்: பலிஸ்பற்று கிழக்கு, மேற்கு, தெல்தெனியா, வெந்தாருவ, உடிஸ்பத்து தெற்கு, மெதசியப்பத்து ஆகிய கிராமச்சங்க வட்டாரங்களும் பிரிவுகளும்.

இங்கு வாழும் 58,300 பேரில் 40,100 பேர் வாக்காளர்கள். இவர்களில் 5.6% கரையோரச் சிங்களவர், 57.2%மேல்நாட்டுச் சிங்களவர், 2.0% இலங்கைத் தமிழர், 2.2% சோனகர், 33.0% ஏனையோர். 62.3 பௌத்தர், 31.6% இந்துக்கள், 3.6 இஸ்லாமியர், 2.5% கிறிஸ்தவர்.

### தொகுதி இல: 46 மினிபே

எல்லைகள்: வடக்கில், மாத்தளைமாவட்டம். கிழக்கில், ஊவா மாகாணம். தெற்கில், ஊவா மாகாணமும், நுவரேலியா மாவட்டமும். மேற்கில், உடதும்பர, பாத்த தும்பர பிரிவுகளின் எஞ்சிய பகுதிகள்.

சேர்ந்துள்ள பகுதிகள்: சம்பஹா மேற்கு, கம்பஹா கிழக்கு, கந்தகே, கந்தப்பஹால ஆகிய கிராமச் சங்க வட்டாரங்கள்.

இத் தொகுதியில் வாழும் 27,400 பேரில் 26,300 வாக்காளர் இருக்கின்றூர்கள். இவர்களீல் மேல்நாட்டுச் சிங்களர் 88.0%, கரையோரப்பகுதியினர் 4.0%, இலங்கைத் தமிழர் 1.0%, ஏனையோர் 6.0%. பௌத்தர்கள் 91.1%, இந்துக்கள் 6.2%, இஸ்லாமியர் 1.4%, கிறிஸ்தவர் 1.3%

### தொகுதி இல: 49 ஹேவாஹெட்ட

எல்லைகள்: வடக்கில் கண்டி, பாத்த ஹேவாஹெட்ட, பாத்த தும்பர பிரிவுகள். கிழக்கில்: நுவரேலியா மாவட்டம். தெற்கில்: நுவரேலியாமாவட்டமும், உடபலாத்த பிரிவும். மேற்கில் உடபலாத்த, பாத்த ஹேவாஹெட்ட பிரிவுகளும், கண்டியும்.

சேர்ந்துள்ள பகுதிகள்: கந்தகே வடக்கு கிராமச்சங் கத்தின் ஒரு பகுதியும், கந்தகே தெற்கு, ஹேவாவிஸ்ஸ ஆகிய கிராமச்சங்க வட்டாரங்களும்.

இங்கு வாழும் 61,100 பேரிடையே 41,400 வாக்காளர்கள் உளர். இவர்களில் 52.8% மேல்நாட்டுச் சிங்களவர், 6.1% கரையோரப் பகுதிச் சிங்களவர், 2.9% இலங்கைத் தமிழர், 5.2% சோனகர், 33.0% ஏனையோர், 59.7% பௌத்தர்கள், 32.6% இந்துக்கள், 5.5% இஸ்லாமியர், 2.1% கிறிஸ்தவர்.

### தொகுதி இல: 50 கம்பளை

எல்லைகள்: வடக்கில் உடுனுவர, யட்டினுவர பிரிவுகளும், உடபலாத்த பிரிவின் ஒரு பகுதியும், கண்டி; பாத்த ஹேவாஹெட்ட பிரிவுகளும். கிழக்கில்: கண்டி, பாத்த ஹேவாஹெட்ட, நுவரெலியா மாவட்டமும், தெற்கில்: நுவரெலியா மாவட்டம், மேற்கில்: உடபலாத்த பிரிவின் எஞ்சிய பகுதியும், சப்பிரகமுவா மாகாணமும்.

சேர்ந்துள்ள பகுதிகள்: கங்கப்பஹால கிராமச்சங்க வட்டாரம். கந்துக்கார பஹல கிராமச்சங்க வட்டாரத்தின் ஒரு பகுதி, கந்துக்கார இஹல கிராமச்சங்க வட்டாரத்தின் ஒரு பகுதி, புசல்லாவ பட்டின சபை, கம்பளை நகரசபை வட்டாரங்கள்.

இத்தொகுதியில் வாழும் 84,100 பேரில் 52,500 வாக்காளர் உளர். இவர்களில் 37.5% மேல்நாட்டுச் சிங்களவர், 11.3% கரையோரப் பகுதியினர், 4.3% இலங்கைத் தமிழர், 8·2% சோனகர், ஏனையோர் 38.7% பௌத்தர், 48.4% இந்துக்கள், 37.9% இஸ்லாமியர், 9.6% கிறிஸ்தவர், 4.0%.

### தொகுதி இல: 51 நாவலப்பிட்டி

எல்லைகள்: வடக்கில் சப்பிரகமுவா மாகாணமும் உடபலாத்த பிரிவின் எஞ்சிய பகுதிகளும் கிழக்கில்: உடபலாத்த பிரிவின் மிகுதிப் பாகமும், நுவரெலியா மாவட்டமும். தெற்கில்: நுவரெலியா மாவட்டமும் உடபலத்கம பிரிவின் ஒரு பகுதியும். மேற்கில்: சப்பிரகமுவா மாகாணம்.

சேர்ந்துள்ள பகுதிகள்: கங்க இஹல கிராம சங்க வட்டாரம், கந்துக்கார இஹல கிராம சங்க வட்டாரத்தின் ஒரு பிரிவும், பஸ்பாகே கிராம சங்க வட்டாரமும், நாவலப்பிட்டி நகரசபை வட்டாரமும்.

இங்கு வாழும் 97,600 பேரில் 50,700 வாக்காளர் உளர். இவர்களில் 10.9% கரையோரப் பகுதிச் சிங்களவர், 31.2% மேல்நாட்டுச் சிங்களவர், 3.9% இலங்கைத் தமிழர், 4·9 % சோனகர், ஏனையோர்49.3%. 41.6%பௌத்தர், 46.3% இந்துக்கள், 6.2% சோனகர், 5.8% கிறிஸ்தவர்.

### தொகுதி இல: 54 மஸ்கேலியா

எல்லைகள்: வடக்கில் சப்பிரகமுவா மாகாணமும், உடபுலத்கம பிரிவின் ஒரு பகுதியும், நுவரெலியா மாவட்டமும். கிழக்கில்: நுவரெலியா மாவட்டம், தெற்கிலும் மேற்கிலும் சப்பிரகமுவா மாகாணம்.

பிரிவுகள்: அம்பகமுவ கிராமச்சங்க வட்டாரமும், அட்டன் டிக்கோயா நகரசபை வட்டாரமும்.

இங்கு வாழும் 159,500 பேரில் 39,000 வாக்காளர் மட்டுமேயுளர். இவர்களில் 13.0% மேல்நாட்டுச் சிங்களவர், 6.0% கரையோரப்பகுதிச் சிங்களவர்,3.0% இலங்கைத் தமிழர், 1.0% சோனகர், ஏனையோர் 77.0%. 18.0% பௌத்தர், 73.0% இந்துக்கள், 2.0% இஸ்லாமியர், 7.9% சோனகர்.

### தொகுதி இல: 47 வலப்பனே

எல்லைகள்: வடக்கில் கண்டி மாவட்டம். கிழக்கில்: ஊவா மாகாணம். தெற்கில்: உவா மாகாணமும் வலப்பனைப் பிரிவின் ஒரு பகுதியும். மேற்கில்: உட ஹேவாஹெட்ட பிரிவின் மிகுதிப்பாகங்கள்.

பிரிவுகள்: ஓயாப்பலாத்த, மெதபலாத்த, யட்டிபலாத்த, உடபலாத்த கிராமச் சங்கங்களின் வட்டாரங்கள். இங்கு வாழும் 72,000 பேரில் 37,500 வாக்காளர் உளர். இவர்களில் மேல்நாட்டுச் சிங்களவர் 42.0% கரையோரப் பகுதியினர் 7.0% இலங்கைத் தமிழர் 2.0% சோனகர் 1.0% ஏனையோர் 48.0%.

பௌத்தர் 48.4%, இந்துக்கள். 46.4%, இஸ்லாமியர் 1.2%. கிறிஸ்தவர் 3.8%.

### தொகுதி இல: 48 அங்குரான்கெத்த

எல்லைகள்: வடக்கில் கண்டி மாவட்டம் கிழக்கில் வலப்பன பிரிவும், உடஹேவாஹெட்ட பகுதியின் எஞ்சிய பாகமும், தெற்கில்: வலப்பனை பிரிவு, மேற்கில் கொத்தமல்லி பிரிவும், கண்டி மாவட்டமும்.

பகுதிகள்: கோஹக்கா, கங்கபலாத்த, தியத்திலக்க, கண்ணேவா, உடகம்பஹா ஆகிய கிராமச் சபைகளின் வட்டாரங்கள்.

இங்கு வாழும் 56,900 பேரில் 43,000 வாக்காளர் உளர். இவர்களில் 65.9% மேல்நாட்டுச் சிங்களவர், 7.5% கரையோரப்பகுதிச்சிங்களவர், 1.0% இலங்கைத் தமிழர், 0.5% சோனகர், 26.0% ஏனையோர்.

72.0% பௌத்தர், 25.0% இந்துக்கள், 2.0% கிறிஸ்தவர், 1.0% இஸ்லாமியர்.

### தொகுதி இல: 52 கொத்மல்லி

எல்லைகள்: வடக்கிலும் மேற்கிலும் கண்டி மாவட்டம். கிழக்கில் உடஹேவாஹெட்ட, வலப்பன ஆகிய பிரிவுகள். தெற்கில் கொத்மல்லிப் பிரிவின் எஞ்சியுள்ள பாகம்.

பிரிவுகள்: வலப்பனே, திஸ்பனே, மெதப்பனே, உடப்பனே ஆகிய கிராமச் சங்கங்களின் வட்டாரங்கள்.

[5ஆம் பக்கம் பார்க்க]

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

## கிராமியக் கலைகளை வளருங்கள்

### உள்ளூராட்சி உதவி அதிபர் வேண்டுகோள்

"கிராமங்கள்தோறும் பரந்து விளங்கும் கிராமியக்கலைகளை வளர்ப்பதில் சனசமூக நிலையங்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். மறைந்துவரும் கிராமியக் கலை, கலாச்சாரப் பண்பாடுகளைப் போற்றிப் பேணும் வகையில் பொதுமக்களை ஈடுபடுத்தவேண்டும்.சுருங்கக்கூறின் கிராமிய கலாச்சாரம் புத்துயிர் பெறவேண்டும். கடந்த பத்தாண்டுகளாகச் சமாசம் ஆற்றி வரும் மகத்தான சேவைகளைப் பெரிதும் பாராட்டும் இவ்வேளையில் தொடர்ந்து அத்தகைய முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுழைக்க முன்வருமாறு சனசமூக நிலையங்களையும், தொண்டர்களையும் கோருகின்றேன்."

இவ்வாறு உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப் அவர்கள் சமீபத்திற் பெரியகடை பாரதி பாஷிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச வருடாந்த விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சமாசத் தலைவர் முதலியார் சி. தியாகராசா விழாவுக்குத் தலைமைவகித்தார். பூநகரிப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். ஸ்ரீனிவாசன் பேசுகையில் புண்டைப் புகழ்மிக்க தமிழ்க் கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் மகத்தான கடமை சனசமூகநிலையங்களுக்குண்டென்றும், கிராமியக் கலை வளர்ச்சியில் அவை தீவிரமாக ஈடுபட்டுழைக்க வேண்டியது அவசியமென்றும் கூறினர்.

பண்டிதர் திரு. வீ. வ. நல்லதம்பி பேசுகையில் சமாசத்தின் சீரிய நிர்வாகத்தினைப் பெரிதும் பாராட்டினர். சமாசச் செயலாளர் முகாந்திரம் ஈ. பி. இராசையா வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கடந்த காலங்களில் சமாசம் ஆற்றியுள்ள சேவைகளை எடுத்துரைத்தார். மற்றும் பலரும் பேசியபின்னர் புதுவருட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

# அபேட்சகர்களின் தேர்தல் ஊர்வலம் ஆதரவாளர் காட்டிய முன்மாதிரி

— நமது நிருபர் —

மட்டக்களப்பு

புதிய தொகுதி நிர்ணயக் கொமிஷன் அறிக்கையின் கீழ் நடைபெறுகிற பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் வைபவம் மிக அமைதியான முறையில் நடைபெற்றது. ஆதரவாளர்கள் கூடியவரை தங்களது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு சிறந்த முன் மாதிரியாக நடந்து கொண்டார்கள். இம்மாவட்டத்தில் அம்பாறைத் தொகுதிக்கு எட்டுப் பேர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருக்கையில் பட்டிருப்புத் தொகுதிக்கு இருவரும், மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கு மூவருமே நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர். நியமனப் பத்திரங்கள்சமர்ப்பித்து முடிந்தபின் கல்லோயாவிலிருந்து வந்த செஞ்சட்டைக்காரர்கள் சமசமாஜக் கட்சி அபேட்சகருக்கு வரவேற்பு அளித்தார்கள். மட்டக்களப்பின் சுயேச்சை அபேட்சகர் ஆதரவாளர் புடைசூழ ஊர்வலமாகச் சென்றார். அதனைத் தொடர்ந்து நான்கு தமிழரசு அபேட்சகர்கள் ஆதரவாளர்களை ஒன்று திரட்டி ஊர்வலத்தை நடாத்தினார்கள்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவோர்

### கற்குடா

திரு. வி. நல்லையா. (தமிழ் பேசும் முன்னணி). ஜனாப். ஏ. ஜ. மாக்கான்மாக்கார். (ஐ.தே: கட்சி). திரு. பி. மாணிக்கவாசகம். (த. அ. கட்சி)

### பட்டிருப்பு

திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கம். (த. பே. முன்னணி). திரு. எஸ். எம். இராசமாணிக்கம். (த. அ. க.)

### மட்டக்களப்பு

(இரு அங்கத்தினர்)

திரு. ரி. மயில்வாகனம். (சுயேச்சை). திரு எஸ். இராசதுரை. (த. அ. க.). ஜனாப். ஏ. எச். மாக்கான்மாக்கார். (சுயேச்சை).

### கல்முனை

ஜனாப். எம். எஸ். காரியப்பர். (லங்கா பிரசா தந்திரக் கட்சி). ஜனாப். எம். ஏ. எல். காரியப்பர். (சுயேச்சை). ஜனாப். மு. காசிம் அகமது (சுயேச்சை). ஜனாப். எஸ். டி. காதர்முகையதீன். (சுயேச்சை) ஜனாப். எஸ். இசற். எம். மசூர் மௌலானா. (த. அ. க.)

### நிந்தவூர்

ஜனாப். எம். எம். மேர்சா. (சுயேச்சை). ஜனாப். எம். ஐ. எம். அப்துல்மஜீத். (சுயேச்சை) ஜனாப். எம். எஸ். காதர். (சுயேச்சை). ஜனாப். எம். எம். முஸ்தபா. (ல. பி. க.)

### பொத்துவில்

ஜனாப். அப்துல் ஜவாத். (ல. பி. க.) திரு. வி. சந்திரசேகரம். (சுயேச்சை). ஜனாப். எம். ஏ. மஜீத். (சுயேச்சை).

### அம்பாரை

திரு. சீலரத்தின டி சில்வா. (லங்கா சமசமாஜக் கட்சி). திரு. எம். எஸ். வக்மீவெவ. (மக்கள் ஐக்கிய முன்னணி). திரு. விஜயபாகு. விஜெசிங்க. (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி). திரு. டி. பி. குணதிலகா. (ஐ. தே. க). திரு. எச். எம். அப்புஹாமி. (சுயேச்சை). திரு. இந்திரதாச. சோமபால. (சுயேச்சை). திரு. டபிள்யு. ஏ. டேவிட். (சுயேச்சை). திரு. அங்கே சிங்கே (சுயேச்சை)

## திருக்கோணமலைப் பகுதி

### திருக்கோணமலை

திரு. என். ஆர். இராஜவரோதயம். (தமிழரசு). திரு. பி. அபயவீர. (எஸ். எல். எப். பி.) திரு. லால் குணரத்தின. (எல். பி. பி.) திரு. ஆர். எம். ஜி. தாஸ்டகிர். (சுயேச்சை).

### மூதூர்

(இரு அங்கத்தினர்)

திரு. டி. பி. ஏகாம்பரம். (தமிழரசு). ஜனாப். எம். ஈ. எச். முகமது. (சுயேச்சை). திரு. ஜே. ஏ. பி. துரைநாயகம். (சுயேச்சை). ஜனாப். ஏ. ஆர். ஓ. அபூபக்கர். (எல். பி. பி.) திரு. ஏ. எச். அல்விஸ். (யூ. என். பி.) ஜனாப். ஏ. எல். ஏ. மஜீத். (சுயேச்சை). திரு. பி. டி. ரி. விக்டர் பெரேரா. (எம். ஈ. பி.) திரு. எவ். பி. வீரகோன். (எஸ். எல். எவ். பி.) திரு. என். டி. பிரான்ஸிஸ் சேவியர். (சுயேச்சை).

* * *

### ஆஸ்பத்திரி புதிய வாட்

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் மிக அவசியமெனக் கருதப்பட்ட சிறுவருக்கான வாட் ஒன்று இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பெற்றோருக்கிருந்த பெரும் பாரந் தீர்ந்திருக்கிறதென்றே கூற வேண்டும். புதிதாகக் கட்டப்பட்டுத் திறபடாமலிருந்த கட்டிடத்தின் கீழ்த் தளத்தில் இந்த வாட் அமைந்துள்ளது.

இம் மாதத்தில் சிறுவர்களிடையே நெருப்புக் காய்ச்சல் பரவிய போது இந்தப் புது வாட் திறபட்டதால் பல சிறுவர்களின் உயிரைக் காப்பாற்றக் கூடியதாகவிருந்தது.

### மின்சாரக் கோளாறு

மட்டக்களப்பு நகரத்தில் தெரு விளக்குகள் அணைவதும், வீட்டிலுள்ள விளக்குகள் மங்குவதும் சாதாரணமான வழக்கமாகிவிட்டது. இங்ஙனம் ஒழுங்கான மின்சார சப்ளை கிடையாமையால் வைத்தியசாலை வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. மின்சாரக் கோளாறு காரணமாக எக்ஸ்-ரே படம் பிடிப்பதில் பெருஞ் சிரமமேற்பட்டிருப்பதாய் வைத்தியசாலை நிர்வாகிகள் புகார் செய்கிறார்கள். இதனால் மிக நுணுக்கமான எக்ஸ்-ரே படங்களுக்கு வதுளைக்கு நோயாளர்களை அனுப்ப வேண்டிய சிரமமேற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

### கடதாசித் தொழிற்சாலையின் சாதனை

இன்றைய பிரதம மந்திரி முதல் பல எதிர்க்கட்சியினராலும், அரசாங்க தரப்பினராலும் கண்டனம் செய்யப்பட்ட கடதாசித் தொழிற் சாலை கடந்த ஆண்டு உற்பத்தியை அதிகரித்துள்ளது. இதனால் கண்டனங்கள் ஆதாரமற்றவை என்பது நிரூபணமாகி விட்டது. புதிய நிர்வாகமே சென்ற ஆண்டுச் சாதனைக்குக் காரணமெனலாம்.

சென்ற ஆண்டில் பெருமளவு வைக்கோல், விவசாயிகளிடமிருந்து வாழைச் சேனைக் கடதாசித் தொழிற்சாலை வாங்கியதன் மூலம் விவசாயிகளுக்குதவி புரிந்துள்ளது குறிப்பிடற்குரியது.

1958-ம் ஆண்டு நவம்பரில் டக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தொழிற்சாலை அதிகார சபை அங்கத்தவர் திரு. கே. வி. எம். சுப்பிரமணியத்துடன் இத் தொழிற்சாலைக்கு விஜயஞ் செய்து நிர்வாகத்தைப் பற்றி நேர்முகமாகப் பார்வையிட்டு அறிந்த பின்பு எதிர்க் கட்சியிலிருந்து எதுவித கண்டனங்களும் கிளம்பவில்லை.

தொழிற்சாலை வெற்றிகரமாக நடவாமைக்கு நிர்வாகச் சீர்கேடே காரணமாயிருந்தது.

### ஆனைப்பந்தி மகளிர் கல்லூரியின் வளர்ச்சி

முத்தமிழ் முனிவன் விபுலானந்த அடிகளால் மட்டக்களப்பில் ஒரு தமிழ்ப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட ஆனைப்பந்திப் பெண் பாடசாலை வளர்ச்சியுற்று இருபது ஆசிரியர்களைக் கொண்ட ஒரு கல்லூரியாக வளர்ச்சியடைந்துள்ளது. இக் கல்லூரி பல துறைகளிலும் நகரிலுள்ள பாடசாலைகளுடன் போட்டியிட்டுத் தனது பெருமையை நிலைநாட்டியுள்ளது. இத்தகைய சிறந்த கல்லூரிக்குப் போதிய கட்டிடங்களில்லாதிருப்பது அதன் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துள்ளது.

### அ. இ. த. ஆசிரிய சங்கத் தலைவரின் மாற்றம்

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத் தலைவரான திரு. கே. எல். இராசேந்திரத்தை அவரது பாடசாலை முகாமைக்காரர் பட்டணத்திலிருந்து அம்பிளாந்துறை என்ற வாவி கடந்து செல்லுமிடத்திற்கு மாற்றியிருந்தார். அவரது மாற்றம் தொழிற் சங்கத்தின் வேலைக்குத் தடையாயிருப்பதால் அதனை அங்கீகரிக்கக் கூடாதென்று ஆசிரிய சங்கம் கேட்டுள்ளது. இதற்கு முடிவான பதில். இன்னும் கல்வியிலாகாவிடமிருந்து கிடைக்கவில்லை. இதனால் முகாமைக்காரர் திரு. இராசேந்திரத்தைத் தொடர்ந்து பழைய பாடசாலையில் படிப்பிக்க அனுமதித்துள்ளார். இது ஒரு தற்காலிக முடிவேயாகும். விரைவில் முடிவு தெரியும்.

# சாதிமத அடிப்படையில் தேர்தல் நடைபெறுகிறதா ?

புதிய பொதுத் தேர்தல் இம்முறை சாதி சமய அடிப்படையிலே நடைபெறப்போவதாக நாடெங்கணும் ஒரே பேச்சாக இருக்கின்றது. இதன் விளைவாகப் பல கட்சிகளும், அபேட்சகர் வேட்டை நடந்த பொழுது அங்கத்தவராவதற்கு அப் பகுதியில் அதிகமாக வாழும் சாதியைச் சேர்ந்த ஒருவரையே நியமிக்க வேண்டியிருந்தது. இதனால் அனுபவமில்லாத சில அபேட்சகர்களைச் சில கட்சிகள் நிறுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற மாநகரசபைத் தேர்தல் பிரசாரத்திலும் சாதியும் மதமும் முக்கிய பாகம் ஏற்றதாகத் தெரிகிறது. சில வட்டாரங்களில் போட்டியிட்டவர்கள், அப் பகுதியில் அதிகமாக வாழும் ஒரு சாதியினரையோ அன்றி மதத்தினரையோ சேர்ந்தவர்கள். என்ற ஒரே காரணத்துடன் தேர்தலிற் போட்டியிட்டனர். இதில் ஆச்சரியமென்னவென்றால், இந்த அடிப்படையில் இவர்கள் வெற்றி பெற்றதுதான்.

இந்த உணர்ச்சி இப்பொழுது நாடெங்கும் பரவி, பல மூலைகளிலும் கோஷமிடுகின்றது.

சில இடங்களில் ஒரு கட்சி, அப் பகுதியில் கூடிய சாதியினரின் பிரதிநிதியொருவரை நிறுத்தினால், பல சுயேச்சைகள் அதே நோக்கத்தினால், தாம் தெரிவு செய்யப்பட்டு விடுவோம் என முன் வந்திருக்கின்றனர்.

### ஒரு வாய்ப்பு

இந்த சாதி அடிப்படையிலே தொகுதிகளை நிர்ணயம் செய்ய, புதிய நிர்ணயக் கொமிஷன் மிகவும் முயன்றுள்ளதாகத் தெரிகிறது. சிற்சில தொகுதிகளில் ஒரு சில சாதியினர் மிகவும் பிற்போக்கான நிலையிலிருப்பதால் அவர்கள் தங்களுக்கென ஒருபிரதிநிதியை தெரிவு செய்ய வாய்ப்புக் கிடைத்தால், அவ்வினத்தினர் முன்னேற ஏதுவாக இருக்குமென அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. இம் முடிவைத் தேர்தல் அபேட்சகர் ஜாபிதாக்கள் உறுதிப்படுத்தும்.

ஜாதித் துவேஷம், மதவெறி ஆகியவை ஒழிந்து போக வேண்டுமெனக்கூச்சலிடும் இவ்வேளையிலே, இப்படியான ஒரு நிலை ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கதொன்று. மக்கள், கட்சி கொள்கைகளுக்கென வாக்களிக்க வேண்டிய சமயத்திலே, நாடு அமைதியிழந்து, சுக்கானுடைந்த மரக்கலம் போல் திசை தப்பி ஓடுகையில், வாக்காளர்கள், நிலையான அரசியலை ஏற்படுத்தக் கூடிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதைவிட்டு சாதி சமய அடிப்படையிலே, அரசாங்கத்தை அமைக்க முயன்றால், நாடு, புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் சென்று விடும். —கே.

# புதிய தேர்தல் தொகுதிகள்

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு வாழும் 87,000 பேரில் 39,000 பேர் வாக்குரிமையுடையவர்கள். இவர்களில் 33.5% மேல்நாட்டுச் சிங்களவர் 6,0% கரையோரப்பகுதிச் சிங்களவர், 2.0% இலங்கைத் தமிழர்,3.0% சோனகர், 56.0% ஏனையோர். 39.0% பௌத்தர், 54.0% இந்துக்கள், 4.0% கிறிஸ்தவர், 3.0% இஸ்லாமியர்.

### தொகுதி இல: 53 நுவரேலியா

எல்லைகள்: வடக்கில் கொத்தமல்லி, வலப்பனை, உடஹேவாஹெட்ட பகுதிகளின் எஞ்சிய பிரிவுகள். கிழக்கில், ஊவா மாகாணம். தெற்கில், சப்ரகமுவா மாகாணமும், கண்டிமாவட்டமும். மேற்கில், கண்டி மாவட்டம்.

பிரிவுகள்: டிம்புலை கிராமச் சங்க வட்டாரம், தலவாக் கொல்லை, லிந்துவ நகரசபை வட்டாரம், நுவரேலியா நான்கு கிராவட் கிராமச்சங்க வட்டாரம் நுவரேலியா மாநகரசபை வட்டாரம்.

இங்குவாழும் 149,100 பேரில் 31,700 பேர் வாக்காளர். இவர்களில் 7.0% மேல்நாட்டுச் சிங்களவர், 8.0% கரையோரப்பகுதிச் சிங்களவர், 3.0% இலங்கைத்தமிழர், ஏனையோர்81.0%. 14.0% பௌத்தர்கள், 75.0% இந்துக்கள், 3·0% இஸ்லாமியர், 8.0 கிறிஸ்தவர்.

(இங்கு ஏனையோர் என்பது இந்திய வம்சாவளியினரையே குறிப்பிடுகிறது)


உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரையே வாங்குங்கள்.




'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

## உங்கள் கால பலன்

**‘பாஸ்கரன்’**

**மேடம்** (ஏப்ரல் 14—மே 14)
அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம். முதல் இரு நாட்களும் கஷ்டமுள்ளதாக இருக்கும். மனதில் ஆறுதலாக இருக்காது. பிதாவழி பந்துக்களால் சிறு சங்கடங்கள் ஏற்படலாம். மிகுதி நாட்கள் நற்பலனைக் கொடுக்கக்கூடியன. பொருள் விருத்தியும் தொழிலில் முன்னேற்றமும் உண்டு.

**இடபம்** (மே 15—ஜூன் 14)
கார்த்திகை 2, 3, 4, ரோகிணி மிருகசீரிடம் 1, 2. முதல் இரு நாட்களும் புதுக் கருமங்கள் ஆரம்பிக்க உத்தமம். ஆனால் திங்கள், பிற்பகல், செவ்வாய், புதன்கிழமைகளை அவதானமாகக் கழிக்கவும். தேகசுகவீனம் சிறு விபத்துகள் ஏற்பட இடமுண்டு. நண்பர்களுடன் விரோதங்களும் ஏற்படலாம். அடுத்த மூன்று தினங்களில் தொழிலிற் சமலாபமும், மிகுந்த பிரயாசமும் அந்நியர் சகாயமும் உண்டு.

**மிதுனம்** (ஜூன் 15—ஜூலை 16.)
மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3. குடும்ப விஷயங்களில் சிறு சச்சரவுகள் ஏற்பட இடமுண்டு. தேக சுகமும் பாதிக்கப்படலாம். பிரதானமாக நேத்திர சுகத்தைப் பேணவும். தொழில் ஸ்தானங்களில் சிறு சங்கடங்கள் உண்டாகும். புதன் பிற்பகலையும், வியாழன், வெள்ளிவாரங்களையும் அவதானமாகச் செலவிடவும். வார இறுதியில் பொருள் லாபமுண்டு.

**கடகம்**: (ஜூலை 17-ஆகஸ்ட் 16)
புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம். சத்துரு ஜயமும், போட்டி விவகாரங்களில் வெற்றியும் ஏற்படும். ஆனால் குடும்பநிலை திருப்திகரமானதாக இல்லை. உங்கள் சுயாதீனமும் பாதிக்கப்படலாம். வெள்ளி பிற்பகலையும், சனிக்கிழமையையும் அவதானமாகச் செலவிடவும்.

**சிங்கம் :** (ஆகஸ்ட் 17-செப்டம்பர் 16)
மகம், பூரம், உத்திரம். மனதில் அமைதி நிலவாது. நீங்கள் நினைத்தபடி கருமங்களை நடத்துவது சங்கடமாக இருக்கும். சஞ்சலங்களும், தேகசுகவீனம், பிரதானமாக வயிற்றுக் கோளாறும் காணப்படுகின்றது. ஆனால் பொருள்வருவாயைப் பொறுத்தவரை நல்ல வாரம். போட்டிகளிலும் வெற்றியுண்டு.

**கன்னி :** (செப்டம்பர் 17-அக்டோபர் 16)
உத்திரம் 2-3-4, அத்தம், சித்திரை 1-2. முன்னிருந்த சில கஷ்டங்கள் நீங்கும். இடமாற்றங்களும் தொழில் மாற்றங்களும் ஏற்படலாம். பிரயாசம் அதிகமாக இருக்கும். பந்துக்களாற் செலவும் சிறு சங்கடங்களும் உண்டாகும். பணவருவாயைப் பொறுத்தவரை நல்ல வாரம்.

**துலாம்:** (அக்டோபர் 17-நவம்பர் 15)
சித்திரை 3-4, சுவாதி, விசாகம் 1-2-3 சகோதரரால் சுபபலனுண்டு. வேளாண்மை முதலியவற்றால் இலாபமுண்டாம். ஆனால் சிநேகிதர்களால் சிறு சங்கடங்களும் அவர்களுடன் விரோதம் ஏற்படவும் இடமுண்டு. தொழிலில் ம்த்திம லாபமுண்டாம்.

**விருச்சிகம் :** (நவம்பர் 16-டிசெம்பர் 15)
விசாகம் 4, அநுஷம், கேட்டை பொருள் நிலையில் அபிவிருத்தி காணப்படுகிறது. ஆனால் செலவினங்களும் அதிகமாகும். இனசனங்களுடன் சிறு விரோதங்களும், வாக்குக் கலகமும் உண்டு. தொழில் விஷயங்களில் வெற்றியைத் தரக்கூடிய வாரம்.

**தனுசு:** (டிசெம்பர் 16-ஜனவரி 13)
மூலம், பூராடம், உத்திராடம் 1-2-3 செலவு அதிகமாகலாம். தேகசுகமும் பாதிக்கப்படும். பிரதானமாகக் கண்நோய் ஏற்பட இடமுண்டு. பிதிர்வழிக் கஷ்டமும் உண்டு. எல்லா விஷயங்களிலும் அவதானமாக நடக்கவும்.

**மகரம்:** (ஜனவரி 14-பெப்ரவரி 12)
உத்திராடம் 4, திருவோணம், அவிட்டம் 1-2. அதிகமான பிரயாசமெடுத்தபின் குறைந்த லாபமே கிட்டும். சிறு பிரயாணங்கள் செய்ய நேரிடலாம். தேகசுகத்தைப் பேணவும். முன் முதலீடு செய்திருந்த வழிகளால் இப்போது சிறு இலாபங்கள் கிட்ட இடமுண்டு.

**கும்பம் :** (பெப்ரவரி 13-மார்ச் 13)
அவிட்டம் 3-4, சதயம் பூரட்டாதி 1-2-3. மிகச் சிறந்த வாரம். எதிர் பார்த்திராத பல லாபங்களும் நண்பர்கள் சகாயமும் தொழிலில் பலவித முன்னேற்றமும் ஏற்படும். ஆனால் தேகசுகம் மட்டும் சிறிது பாதிக்கப்படலாம்.

**மீனம் :** (மார்ச் 14-ஏப்ரல் 13)
பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி. தொழில் விஷயங்களில் முன்னேற்ற முண்டு. அதற்கேற்ப பிரயாசமும் அதிகமாகவே இருக்கும். நண்பர்கள் மூலமாகப் பலவித உதவிகள் உண்டு. இடமாற்றம் அல்லது சிறு பிரயாணத்துக்கிடமுண்டாம்.



## நமது நூல் நிலையம்

**ஒளியின் முன் - ஆசிரியர்:** ஆர். சூடாமணி; **விற்பனைஉரிமை:** பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை 1; **விலை** ரூ. 2-50.

பத்திரிகைப் பரவையிலே இன்று சிறுகதை கவர்ச்சியான ஓர் இடத்தைப்பெற்றுவிட்டது. உருப்படியான ஒரு கதையை எழுத வேண்டுமெனச் சில எழுத்தாளர்கள் எண்ண முன்னரே அவர்களின் கரு வேரூன்றி உள்ளத்திற் படிந்து சிறுகதையாக உருவாகி விடுகின்றது. இதனை எதற்காகக் குறிப்பிடுகின்றேன் என்றால், சிறுகதை வளர்ந்து வரும் வேகத்தை உணர்த்துவதற்காகவே.

இச் சிறுகதைத் தொகுதியில் உள்ள அத்தனை கதைகளும் அவசரகோலத்தில் அமைந்தனவாகத் தோன்றவில்லை. கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்து உருவாக்கிய கதைகள் இவை. பரிவும் பாசமும், பண்பும் அன்பும், ஆவலும் ஆதரவும், தெய்வத் தன்மையும் தியாகமும் இக் கதைகளுடன் இழைந்து உறவாடுகின்றன. மாற்றாந் தாயின் குழந்தைப் பாசத்தை ‘அன்பு உள்ளம்’ என்ற கதையிற் கண்டு மனச்சாந்தி யுறுகின்றோம். உள்ளத்தின் ஒருமைப்பாட்டை உணர்த்தி வைக்கின்றது ‘ஒன்றே வாழ்வு’ என்ற கதை.

வானமும் பூமியும் பொன்னொளியில் மூழ்குவதையும், வெண் மகுடச்சிரம் பொன் மழையில் குளித்து தெய்வ கம்பீரத்துடன் பொன்னுகமிளிரும் அற்புதக் காட்சியையும் ‘ஒளியின் முன்’ கண்டு உள்ளத்தையே பறிகொடுத்து விடுகின்றோம்.

தியாக உள்ளம் படைத்த வீராயியை எப்படி மறக்க முடியும்? வெவ்வேறு திசையிற் சென்றவர்கள் ஒன்று கூடும் இயல்பு தான் என்னே! கமலாவின் ஏக்கத்தை எண்ணி ‘ஆனந்தக் கண்ணீர்’ சொரியாதவர் யார்? இவ்வாறு ஒவ்வொருகதையும், ஒவ்வொரு துறையிற் சிறந்து விளங்குகின்ற தென்றல் அதற்குக் குமாரி சூடாமணியின் கதை சொல்லும் ஆற்றல் தான் காரணம் எனலாம். சிறு கதை இலக்கியத்துறையில் இவருக்கு மகோன்னதமான எதிர்காலம் உண்டு என்பதை இக்கதைகள் எடுத்துக் காட்டுகின்றன.

—இ. அ.

**மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.**

* * *

**கலை**—பொங்கல் மலர்—**ஆசிரியர்:** ஓவியர் அ. சீனு; **வெளியீடு:** பாலு பிரதர்ஸ், 131, தாயார் சாகிப் தெரு, சென்னை 2; **விலை:** ரூபா 1-25.

கலாரசிகர்களுக்கும் இலக்கிய நண்பர்களுக்கும் விருந்தளித்துவரும் ‘கலை’ பொங்கல் மலர் கண்கவர் வனப்புடன் வெளியாகியுள்ளது. தமிழறிஞர்களின் கட்டுரை, கருத்துரை, ஓவிய விளக்கம், கதை, கவிதை உட்பட வண்ணச்சித்திரங்களும் சேர்ந்து இம் மலருக்கு மணம் ஊட்டுகின்றன. பக்கத்துக்குப் பக்கம் படங்களுடன் பொலிந்து விளங்கும் பொங்கல் மலர் சினிமா ரசிகர்களுக்கு நல்விருந்தாகும்.

* * *

**இலக்கிய உலகம்**—தமிழ் மாத இதழ்—**வெளியீடு:** பழனியப்பா பிரதர்ஸ் 4, வெங்கடேச நாயக்கன் தெரு, த. பெ. எண் 434, சென்னை 5; **ஆண்டுச்சந்தா:** ரூபாய் 1-20; **தனிப்பிரதி** காசு: 10.

நல்ல தமிழ் நூல்களை வெளியிட்டுவரும் பழனியப்பா சகோதரர்களின் முயற்சியே ‘இலக்கிய உலகம்’. இத் தமிழ் மாத இதழில், புத்தகம் பற்றிய விளக்கங்களும் இனிய கட்டுரைகளும் உள. இலக்கிய நண்பர்களுக்கு இத்தகைய வெளியீடுகள் உபயோகமானவை.

## மனோரஞ்சித கானசபை

கலைகள் அனைத்தும் அழகுள்ளவைகள் தான்; ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் கலையழகைக் காட்டுகின்றது. ஆனால் நாடகம் எல்லாக் கலைகளையும் உள்ளடக்கி ஒரே நேரத்தில் மக்கள் மத்தியில் வைத்து அழகு காண்கிறது. இவ்வாறு சமீபத்தில் கொழும்பு மோடி மண்டபத்தில் நடைபெற்ற மனோரஞ்சித கான சபையின் கலை நிகழ்ச்சிக்கு தலைமை வகித்துப் பேசிய ஜனாப் டி. எம். பீர்முகம்மது கூறினார். ஓரங்க நாடகங்களும் நாட்டியங்களும் இசை நிகழ்ச்சிகளும் கலை விழாவில் இடம் பெற்றிருந்தன.

## பல்கலைக் கழகப்படிப்பும் தமிழில்
### எம். ஈ. பி. தேர்தல் விஞ்ஞாபனம்

வங்கிகள், இன்ஸூரன்ஸ் கொம்பனிகள், அந்நியருக்கு சொந்தமான தோட்டங்கள், கைத்தொழில்கள், வியாபார ஸ்தலங்கள் ஆகிய வற்றைத் தேசிய மயமாக்குவது திரு. பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி. கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு முக்கிய அம்சம்.

பிரதான உணவுப் பொருள்களின் வியாபாரம் முழுவதும் கூட்டுறவு பகுதிக்கு ஒப்படைக்கப்படும். இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகம் இலங்கையர் மயமாக்கப்படும்.

மொழி சம்பந்தமாக அந்த விஞ்ஞாபனம் கூறுவதாவது: உத்தியோக மொழி என்ற முறையில் சிங்களம், ஆங்கிலம் வகித்த இடத்தை நிரப்பும். தமிழுக்கும் அதற்குரிய ஸ்தானம் வழங்கப்படும். தமிழ் பேசும் மக்கள் தம் மொழியில் பாண்டித்தியம் பெறுவதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். பல்கலைக் கழகத்திலும் விஞ்ஞானம், பொருளாதாரம், என்ஜினியரிங் முதலிய பாடங்கள் தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மூலம் கற்பிக்கப்படும். தமிழ் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் தமிழிலேயே நிர்வாகம் நடைபெறும். அரசினர் உதவி பெறும் பள்ளிக்கூடங்களும் உதவி பெறாத பள்ளிக்கூடங்களும் அரசாங்கத்தால் ஸ்வீகரிக்கப்படும். கல்வி சம்பந்தமான சகல விஷயங்களும் அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்கும்.

## இலங்கை அரசியல் வானில் கருமேகங்கள்

இராவணன் ஆட்சியில் விபீடணன் இருந்ததுபோல், இரணியன் ஆட்சியிற் பிரகலாதன் போல, தமிழரிடையேயும் ஒரு சிலர் இருக்கின்றனர். இவர்களைப்பற்றித் தமிழ்மக்கள் கவனமாக இருத்தல்வேண்டும். இவ்வாறு திருக்கோணமலைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொண்டாடிய பொங்கல் விழாவிற் பேசிய கலாநிதி சு. வித்தியானந்தன் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது: தமிழன் கண்ட இலக்கியம் என்றால் தமிழன் கண்ட நாகரிகம் என்பதே பொருள். தமிழர் இலக்கியம், தமிழர் நாகரிகம் அகம், புறம் எனப் பகுக்கப்பட்டிருந்தது. அக வாழ்வுக்கு அன்பு அடிப்படையாயிருந்தது. புறவாழ்வு வீரம், மானம் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தது.

ஒரு நாட்டின், இனத்தின் தலைவனுக்கு முன்னேக்கும், அறிவும் இடித்துரைக்கும் மந்திரிகளும் தேவை. இதுவே தமிழன் கண்ட அரசியல். இத் தகுதிகள் இல்லாதோர், ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளதாலேயே இன்று இலங்கையின் அரசியலைக் கருமேகங்கள் சூழ்ந்துள்ளன.

அன்று திருமண வைபவத்தின் போது தமிழ்ப் பாடல்கள் ஓதப்பட்டன. இன்றோ இது எமக்கு விளங்காத மொழியில் நடைபெறுகின்றது. இந்நிலை மாறவேண்டுமானால் தமிழிளைஞர்கள் சீர்திருத்தப்பணியில் முழுமூச்சுடன் முனையவேண்டும்.

பீர்முகம்மது, ஈழவாணன், இ. சோமசுந்தரன், திரு. கோடீஸ்வரன் ஆகியோரும் பேசினர். இசைநாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மிகச் சிறந்த

அலுமினியப்

பாத்திரங்களுக்கு

எங்களிடம் வாருங்கள்

சி. வி. பாட்

டாம் வீதி, :: கொழும்பு.

# வாக்காளர் கையில் 'மந்திரக்கோல்'
# அதனைப் புத்தியாக உபயோகித்தால் நன்மை
## இன்றேல் மீண்டும் ஆபத்துத்தான்

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று இடித்துரைத்தார் பாரதியார். ஆனல், எந்த நாளுமே மன்னர்களா? அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும்தான் மன்னர்களா என்பது தெளிவாயில்லை. எந்த நாளும் எல்லோரும் மன்னர்கள் என்ருல், வழிதெருவில் ஒருவரை யொருவர் சந்திக்கும் போது, "வாருங்கோ தம்பி, வாருங்கோ அண்ணை, வாருங்கோ ஐயா" என்று சொல்ல முடியுமா! 'மன்னரே வாருங்கள்' என்றுதான் சொல்ல வேண்டும்.

இது எப்படியிருந்தபோதிலும், இலங்கையைப் பொறுத்த வரையில், 5 வருடங்களுக்கொருமுறையாவது "எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்." ஆனல், நாலே நாலு மாதங்களுக்குத்தான்! அதாவது பார்லிமெண்ட் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நாள்முதல் தேர்தல் தினம் வரை. இந்தத் தினத்தில் எந்தநேரம் ஒருவர் தமது வாக்குச்சீட்டைப் பெட்டிக்குள் போட்டுவிடுகிருரோ அந்தநேரமே தமது கிரீடத்தையும் கழற்றி வைத்துவிட்டு சாதாரண மனிதராகிவிடுகிருர்.

இந்த நாலு மாதங்களுக்கு 'மாஜி' திருவாளராயிருந்து மன்னனுக மாறிய வாக்காளருக்கு நடக்காத நடப்பெல்லாம் நடக்கும். முன்பின் அறிமுகமில்லாதவர்கள் இவரைக்கை கூப்பி வணங்கி குசலம் விசாரிப்பார்கள். கல்யாண வீடு செத்தவீடுகளுக்கு அழையாத உற்ருர் உறவினர் எல்லாம் 'படா படா' கார்களில் வந்திறங்குவார்கள். இதுமட்டுமா? சில மன்றுதி மன்னர்களுக்கு பெரிய பெரிய 'கனம்' தங்கியவர்களிடமிருந்து கைப்பூச்சும் கிடைக்கும். இதையெல்லாம் பார்த்து மனம் விறைத்துப் போவார் 'மன்னர்'.

இன்று இலங்கையில் எல்லோரும் இந்நாட்டு மன்னர். ஆனல், முந்திய காலங்களிலிருந்த பல படாடோபங்கள், புதிய தேர்தல் சட்டங்களினுல், இம்முறை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. முன்பு, ஒரு தொகுதியிலிருந்து இன்னெரு தொகுதிக்குப் போய் 'கள்ள வோட்டு' போட்டு 10, 15 ரூபாய் சம்பாதிக்கும் சில 'மன்னர்'கள், இம்முறைஒரே நாளில் நாடெங்கும் தேர்தல் நடக்குமாதலால், சிறிது இடர்ப்படுவார்கள். முந்தியைப்போன்ற டம்பாச்சாரி விருந்து வேடிக்கைகளுக்கு இம்முறை அவ்வளவு வசதியில்லை.

புதிய தேர்தல் விதிகள் அபேட்சகர்களுக்கும் பலவித சங்கடங்களைக் கொடுத்துள்ளன. விளம்பரம் ஒட்டுதல், கொடி பறக்கவிடுதல், ஒலிபெருக்கி உபயோகித்தல், கூட்டம் கூட்டுதல், கார்கள் உபயோகித்தல், அடையாளச் சின்னங்கள்—இவை எல்லாவற்றிலும் அவர்கள் மிகக் கடுமையான விதிகளை அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் உத்தேசித்துப் போலும் ஓர் அபேட்சகர் தாம் பிரசாரக் கூட்டமே நடத்துவதில்லையென்று கூறிவிட்டார்! பலர் அச்சிட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் தங்கள் கருத்துகளையும் கொள்கைகளையும் வாக்காள 'மன்னர்' களுக்குத் தெரியப்படுத்தி வருகிருர்கள்.


கடுமையான தேர்தல் விதிகள் இருப்பதனுலோ அல்லது வேறு காரணங்களினுலோ, வழமையாகக் காணப்படும் தேர்தல் அமளி துமளியை இன்னும் வாக்காளரிடையே காண முடியவில்லை. உண்மை, நாலுபேர் சந்திக்குமிடத்தில் தேர்தல் பேச்சு அடிபடுகிறதுதான். ஆயினும் முந்தினகாலத்து உற்சாகத்தைக் காணமுடியவில்லை, இதற்கு அடிப்படையான காரணம் தமிழினம் முழுவதுமே கடந்த நான்கு வருட காலமாக அனுபவித்த இன்னல்களே என்பது நிச்சயம். ஒருவகை வெறுப்பும், ஒன்றிலும் அக்கறையில்லாத ஒரு விச்ராந்தியான மனப்பாங்கும், ஏமாற்றமும், 'யார் வந்தாலென்ன, யார் போனலென்ன—எல்லாம் ஒன்றுதான்' என்ற மனக் கசப்பும் எங்கும் வியாபித்துக்கொண்டன.

இது எவ்வளவு பரிதாபகரமான நிலையாயிருந்த போதிலும், மகா ஆபத்தானதென்பதை இவ்விடத்தில் எச்சரிக்க வேண்டியிருக்கிறது. வாக்குச்சீட்டானது சுதந்திரத்தின் சின்னம், சனநாயகத்தின் அச்சாணி. அது ஒரு புனிதமான திரவியம். 'என்னுடைய ஒரு வாக்குத்தானே. போட்டாவிட்டால் என்ன வந்துவிட்டது' என்று நினைத்து எல்லோருமே வாளாவிருந்துவிட்டால் அத்தனைபேரும் தங்கள் தலையில் மண்ணைக் கொட்டினவர் ஆவார்கள்.

ஐந்து வருடத்துக்கொருமுறை தங்கள் கைக்கு வந்து சேரும் இந்த மந்திரக்கோலை வாக்காளராகப் பதிவான எல்லோரும் புத்தியாக உபயோகம் செய்தால்தான் தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும் நன்மை தேடிக்கொள்வார்கள். இன்றேல் மீண்டும் ஆபத்துத்தான்.

—வி. என். பி.

நீங்கள் செய்ய விரும்பும் கணக்கற்ற தையல் வேலைகளை



நெக்கி

தையல் மெஷின் செய்துகொடுக்கும்.

NECCHI

உலகத்திலேயே மிகச்சிறப்பு வாய்ந்த தையல் மெஷின். இலங்கையிலுள்ள வீடுகளிலெல்லாம் நெக்கி தான் இடம்பெற்று வருகிறது. ஏனெனில் நெக்கி மூலம் பெண்களின் கனவுகள் நனவாகின்றன.

உங்கள் பல்வேறு தையல்வேலைகளையும் மிகவும் இலகுவாகவும், திறமையுடனும் செய்து விடுகிறது நெக்கி தையல் மெஷின்.

சாதாரண தையல்மெஷினில் வேலை செய்வதனுல் ஏற்படும் களைப்போ சோர்வோ நெக்கி மெஷினை உபயோகிக்கும் பொழுது ஏற்படவே மாட்டாது.

நெக்கி சூப்பர்நோவா ஓட்டமெட்டிக்கா தையல் மெஷின், பலவித வர்ணப் பூவேலைகளையும், லேஸ் வேலைகளையும், பட்டன் துவாரங்களையும் எவ்வித கஷ்டமுமின்றி தைத்துக் கொடுக்கும் திறமை வாய்ந்தது.

நெக்கி நோரா, ஓட்டோமெட்டிக்கா ரூ.825-தொடக்கம்.

நெக்கி எஸ்பெரியா ரூ.375-தொடக்கம்.

நெக்கி மிரெல்லா (மின்சாரத்தாலும் கையினுலும் இயங்குவது) ரூ. 625 தொடக்கம்.

விற்பனையாளர்கள்:

தி நியூ சீத்தா ஸ்டோர்ஸ் (கம்பஹா)


கெந்தலா ஸ்டோர்ஸ் (கெந்தலா)

பி. ஏ. எஸ். ட்ரான்ஸ்போர்ட் லிமிடெட் (ஹோமகம)

தி பயனியர் ஸ்டோர்ஸ் (கண்டி)

5 வருஷ உத்தரவாதத்துடன் கட்டுப்பணத்திற்குக் கிடைக்கும்.

மெஷினின் பாகங்களை எம்மிடமே பெற்றுக் கொள்ளலாம்.



விபரங்களுக்கு:

ரிச்சர்ட் பீரீஸ் அன் கோ., லிமிடெட்

மெயின் வீதி, கொழும்பு. போன்: 4753

## 10 லட்சம் மக்கள் கதி என்ன?

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதன் மூலம் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டவர்களாவோம்.

**இணைப்பு**

இரண்டு சங்கங்களினதும் நிர்வாகஸ்தர்களுடன் திரு. எஸ். தொண்டமான் திரு. கே. இராமலிங்கம், திரு. ஏ. கே. கந்தசாமி, திரு. வி. ஜே. வெள்ளையன் ஆகியோரைக் கொண்ட கூட்டுக்குழுவொன்று அமைந்து இப்பொழுதுள்ள நிர்வாகஸ்தர்களிடமிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை ஒப்புக் கொண்டு நிர்வகிக்க வேண்டும். மேற்கூறிய நிர்வாகஸ்தர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிதிக்காரியதரிசியைத் தவிர இதர நிர்வாகஸ்தர்கள் தங்கள் பொறுப்பை மேற்கண்ட கூட்டுக் கமிட்டியிடம் ஒப்புவித்துவிட்டு இராஜினுமாச் செய்ய வேண்டும்.

இந்த இணைப்பு ஏற்படும் பொழுது இரண்டு ஸ்தாபனங்களையும் சார்ந்த நிர்வாகக் கமிட்டிகளும் பொதுக் கவுன்சில்களும் ஒன்ருக இணையும். ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸானது அதன் அமைப்பு விதிகளின்படி தீர்மான மூலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் ஒன்ருக இணையும். இவ்விணைப்பு ஏற்படும் பொழுது ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தினர்கள்தாமாகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தினர்களாக ஆகிவிடுவார்கள்.

**சந்தாப்பணம்**

ஐக்கியமாக இணைந்தபின்பு ஒன்றுபட்ட இந்த இரு ஸ்தாபனங்களும் நிர்வாகஸ்தர்கள் நிர்வாகசபை, பொதுக் கவுன்சில்களின் தேர்தலின் போது சட்ட ரீதியான தகராறுகள் குறுக்கிடாதவாறு பாதுகாப்பதற்காக மேற்கூறிய இரு ஸ்தாபனங்களும் இதற்கு முன்பு சந்தா செலுத்தி அங்கத்துவ உரிமை பெற்றிருந்தாலும், 1960-ம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச்சு மாதம் 31-ந் திகதி வரையுள்ள 3 மாதங்களில் ஆகக் குறைந்தபட்சம் ஒரு மாத சந்தாவாகிய சதம் -/50ஆவது செலுத்தியவர்களை மாத்திரமே அங்கத்துவ ஜாபிதாவில் சேர்த்துக் கொள்ளப்படும். ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் ஒன்ருக இணைந்த பின்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுப்பதற்காக ஜனநாயக காங்கிரஸ் அங்கத்தினர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் தொடர்ந்திருந்து அங்கத்தினர்களாகக் கருதப்படுவார்கள்.

இரு ஸ்தாபனங்களினது அரசியல் ஸ்தாபனமான இலங்கை ஜனநாயக காங்கிரஸ் மேற் கூறப்பட்ட விதிகளுக்கேற்ப ஒன்ருக இணைந்து ஒரே ஸ்தாபனமாக இயங்கும். அதன் நடைமுறை விதிகளும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் இணைவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படையை ஏற்றுக் கொள்வதெனவும் தீர்மானிக்கிறது.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு தை மீ 10 உ (23-1-60)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## ஜனநாயகத்துக்கு ஆபத்து

இலங்கையில் ஜனநாயக ஆட்சி அதற்குரிய பண்புகளை எல்லாம் நாளிலும் பொழுதிலும் இழந்துவருவதைக் கண்டு யார்தான் ஏங்கமாட்டார்கள். பிரதமர் தகநாயக்காவின் அட்டகாசங்களும் அவருடைய ஒவ்வொரு செயலும் இந்த ஏக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. நாட்டில் ஏற்பட்டுவரும் கலவரங்களையும், விபத்துக்களையும் அவர் சுட்டிக் காட்டி அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதேயென அவர் துடியாய்த் துடிக்கிறார். இவற்றைக் கண்டு மக்கள் அச்சமும் பீதியும்கொள்வது இயல்பே.

உள்நாட்டுப் பாதுகாப்புக்கெனப் புதிய அமைச்சு ஒன்றினை அவர் திடீரென ஏற்படுத்தியிருப்பதுகூட மக்களின் உள்ளங்களிற் பல சந்தேகங்களை உண்டாக்கிவருகின்றது. நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவதே புதிய அமைச்சின் நோக்கமாக இருந்தாலும், பிரதமரின் மூளையில்இது திடீரென உதயமாகியிருப்பதன் அவசியம்தான் என்ன? இவற்றை எல்லாம் கவனிக்கும்போது புதிய பொதுத் தேர்தலை எந்த விதப்பட்டும் பின்போட வழிவகைகளைக் கையாளுகின்றார் என்றே எண்ணவேண்டியிருக்கின்றது. இத்தனைக்கும் மக்கள் தங்கள் பாட்டில் அமைதியாகவிருந்து பொதுத் தேர்தலில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றனர். சென்ற நான்கு வருடகால ஆட்சியில் மக்கள் அடைந்த இன்னல்கள் கொஞ்சமல்ல. அவற்றுக்கெல்லாந்தீர்வு காணும் வகையில் புதிய ஆட்சி ஒன்றினை நாட்டில் மலரச்செய்வதற்கு வாக்காளப் பெருமக்கள் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் எண்ணத்துக்கு மண் போடுவது பிரதமரின் நோக்கமாயின் அவர் ஜனநாயகத்தைத் துரும்பென மதித்து மக்களின் சுதந்திரத்துக்கு ஊறு விளைக்கத் திட்டமிட்டிருக்கின்றார் என்றே கருதவேண்டியிருக்கின்றது.

உள்நாட்டுப் பாதுகாப்புக்கெனப் பிரதமர் சிருஷ்டித்துள்ள புதிய அமைச்சு பல சந்தேகங்களுக்கு இடமளிக்கின்றது. போயும் போயும் திரு. சிட்னி டீ. சொய்ஸாவை அவர் எதற்காக நியமிக்க வேண்டும்? உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியிலிருந்து கட்டாய ஓய்வு பெறச் செய்யப்பட்ட ஒருவரை மீண்டும் வரவழைத்துப் பொறுப்பான ஒரு பதவியில் அவரைத் தூக்கி வைப்பதன் இரகசியம் என்ன? திரு. சிட்னிக்குப் பதவி அளிப்பதற்காக ஜனநாயக முறைக்கும் நல்லாட்சிக்கும் ஊறு விளைக்கும் செயலானது தனிப்பட்டஒருவரின் கௌரவத்தைப் பெரிதெனக் கருதுவதாகவே தோன்றுகின்றது. 'நாடு எக்கேடு கெட்டாலும் நான் நினைத்ததையே செய்து முடிப்பேன்' எனப்பிடிவாதங் கொண்டு நடப்பது சர்வாதிகாரப் போக்கேயன்றி வேறொன்றுமல்ல. மக்கள் இந்த விதமான தீய சக்திகளை ஒருபோதும் சகிக்க மாட்டார்கள் என்பதை மட்டும் பிரதமருக்கு எடுத்துக் கூற விரும்புகின்றோம்.

## பெருகி வரும் சதிவேலைகள்

சென்ற நான்கு வருடகாலமாக நாட்டில் ஏற்பட்டு வரும் கலகங்களையும் சதிச் செயல்களையும் கவனிக்கும்போது இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் அதன் மதிப்பை இழந்து வருகின்றதென்றே கூற வேண்டியிருக்கின்றது. 1958ஆம் ஆண்டு கண்ட வகுப்புக் கலவரமும் அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட இனப் பகையும் இன்னுந்தான் மறைந்தபாடில்லை. சமீபத்தில் வவனியாவில் நடைபெற்ற பயங்கர ரயில் விபத்து சதிச் செயலாகவே யிருக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் நாடெங்கணும் வலுப்பெற்றுள்ளது. இக் கோர விபத்துக்குப் பின்னர் பரந்தன் குருநாகல், மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களிலும் ரயில் வண்டிகளைத் தடம்புரளச் செய்வதற்கான சதிச் செயல்களில் விஷமிகள் ஈடுபட்டிருக்கின்றனர். இவற்றைக் கண்டு அரசாங்கமே திகைத்துப் போய் விட்டது. புகையிரதப் பாதைகளில் அத்துமீறிக் கைவைப்பவர்களுக்கு இருபது ஆண்டுச் சிறை வாசமும் கசையடியும் மாத்திரமின்றி மரண தண்டனையும் விதிக்கப்படுமெனக் கொட்டை எழுத்துக்களில் எச்சரிக்கை செய்த பின்னர்தான் அரசாங்கம் திருப்தியடைந்துள்ளது போலும்!

ஆனால், சென்ற வெள்ளிக்கிழமை இரவு இரத்மலானை நீர்ப்பாசனப்பகுதி பண்டசாலையில் நேர்ந்த பிரமாண்டமான தீ விபத்து நாட்டு மக்களுக்கு மிகுந்த கலக்கத்தை உண்டாக்கியிருக்கின்றது. கடந்த பத்து வருட காலத்தில் இத்தகைய மிகப் பெரிய தீ விபத்தே ஏற்படவில்லை. இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியே ஓரளவு தடைப்பட்டுவிட்டதெனலாம். ஏனெனின் இங்கிருந்துதான் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கான சகல உபகரணங்களும் இயந்திரங்களும் தீவின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன. இத் தீ விபத்தால் நாற்பது இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டமேற்பட்டுள்ளது. தவிர, இத்தீ விபத்தின் காரணமாக சில ஆண்டுகளுக்கு நீர்ப்பாசனத் திட்ட வேலைகளைத் திட்டப்படி நிறைவேற்றி வைப்பதே இயலாததாகின்றது.

நாட்டு மக்களிடையே பொறுப்புணர்ச்சி அற்று வருகின்றதென்பதையே இச் சதிச் செயல்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. நாமிருக்கும் நாடு நமதே என்ற எண்ணமும், அதனைப் பேணிக் காக்கவேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியும் மக்களிடையே ஏற்படாதவரை, இத்தகைய சதிச்செயல்கள் மலிந்து, நாட்டின்சமாதான வாழ்வுக்கு ஆபத்தையே உண்டாகி வரும்.

## இருவர் சைக்கிள் ஓட்டம்

**யா**ழ்ப்பாணத்தில் சைக்கிள் வண்டி ஓர் இன்றியமையாத போக்குவரத்து சாதனம். அதை 'ஏழைகளின் வண்டி' என்று சொல்லலாம். சரசமான விலைக்கும் வாங்கலாம். தாபரிப்பு செலவுகளும் மிகவும் சொற்பம். ஒழுங்கை, தெரு, மூலை, முடுக்கு எல்லாம் போய் வரும். போக்கு வரத்து வசதிகள் மிகக் குறைவான கிராமப் பகுதிகளில் இதன் உதவி இம்மட்டன்று.

ஒரு சைக்கிளில் இருவர் ஏறிச் செல்வது சட்ட பூர்வமாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் கண்டும் காணமலும் பலர் 'இரட்டை' ஓடுகிறார்கள். மிகுதியாக மாணவர்களே இப்படிச் சட்டத்தை மீறுவது. பள்ளிக்கூடங்களுக்கு வெகு தூரத்திலிருக்கும் மாணவர்கள், அதுவும் ஏழைக்குடும்பத்தவர்களானல், பள்ளிக்கூடம் போய் வரும் போதும், இடை வேளையில் சாப்பாட்டுக்குப் போகும்போதும் 'இரட்டை' ஓடுவது சர்வசாதாரணம். அவர்கள் ஓரளவு வேகமாகவும் குறைந்த செலவோடும் போய்வருவதற்கேற்ற சாதனம் சைக்கிள்தான், ஒருவர் தமது குடும்பத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் சைக்கிள் வாங்கிக் கொடுக்க இயலாதவராயிருக்கக்கூடும். இப்படியான சந்தர்ப்பங்களில் மூத்த பிள்ளை தனது இளையோனையும் சைக்கிளில் 'இரட்டை' ஏற்றிச்செல்லலாம். இவர்களைச் சட்டம் வந்து தடுக்கும்போது சற்று பரிதாபமாய்த் தானிருக்கும். சில கிராமக் கோடுகளில் இவ்வித குற்றத்திற்காக சிறுவர்களுக்குப் பிரம்படி வழங்கப்பட்டதென்ற செய்தி மனிதத் தன்மையுடைய் எவரையும் நாணச் செய்யும்,

கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கென 'ஸ்பெஷல்' பஸ்ஸுகள் அமர்த்தப்படுகின்றன. ஆனல் யாழ்ப்பாணத்தில் இப்படி ஒன்றுவது கிடையாது. இளம் பாலர்கள் இடித்து நெருக்கி பஸ்ஸில் ஏறுவதையும், இடமில்லையென்று ஏற்றுப்படாவிட்டால் அவர்களுடைய முகத்தில் தோன்றும் ஏமாற்றமும் கவலையும் எவர் மனத்தையும் இளகச் செய்யும்.

ஆகையால் 'இரட்டை' ஓடுவதை ஒரேயடியாக தடை செய்யாமல் 'இரட்டை' ஓடுபவர்களுக்கும் அவர்களால் பிறருக்கும் ஆபத்து உண்டாகாத வகையில் இச்சட்டத்தை ஓரளவுக்கு மாற்றியமைத்தால் ஏழை மாணவர்களுக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## மொழிக் கொள்கை
## தமிழ்க் கட்சிகளின் விளக்கம் என்ன ?

மொழிப்பிரச்சினையைப் பற்றி இலங்கை சமசமாஜக் கட்சி சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

இவ்வறிக்கையில் சமசமாஜக் கட்சி சம அந்தஸ்து என்ற சுலோகத்தைக் கைவிட்டு சிங்களம், தமிழாகிய இரு மொழிகளும் நாட்டு நிர்வாகத்தில் வகிக்கவேண்டிய நிலையை வர்ணித்திருக்கிறார்கள். சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசகரும மொழிகளாக (Official Languages) இருக்கவேண்டுமென்றும் சிங்களம் பெரும்பான்மையோரின்மொழி என்ற காரணத்தால் உரிய அந்தஸ்தை (rightful place) வகிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறன்து.

உரிய அந்தஸ்து என்ற சொற்றொடர் தெளிவற்றதாக இருக்கிறது. மேலும் சிங்களம் அரசாங்க மொழியாக (State Language) இருக்கவேண்டும் என்ற பொருளையும் கொடுப்பதாக விளக்கலாம்.

சிங்கள மக்களிடையே இயங்கிவரும் கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற தமிழர் இல்லாத கட்சிகளாய் இருந்தாலென்ன, அல்லது சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற தேசியக் கட்சிகளாய் இருந்தாலென்ன, எல்லாம் சிங்களத்தையே அரசாங்க மொழியாக ஏற்கும் கட்டத்துக்கு வந்துவிட்டார்கள் போலிருக்கின்றது.

தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் போன்ற தமிழர்களே யடங்கிய கட்சிகள் இந்நிலையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவை இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கை உடையனவாய் இயங்கிவருகின்ற போதும் இரு மொழிகளின் நிலைகளைத் திட்டவட்டமாக இதுவரை வரையறுத்துக் கூறவில்லை.

1956இல் நிகழ்ந்த பொதுத் தேர்தலில் மொழிக் கொள்கை மக்கள்முன்னிலையில் பிரபல்யம் அடைந்திருந்ததனல் சம அந்தஸ்து என்ற சொற்றொடர் தமிழரின் கோரிக்கையை பிரதிபலிப்பதற்குப் போதுமானதாக விருந்தது.

ஆனல், இப்பொழுது நிலைமை வேறு. எம். ஈ. பி. அரசாங்கம் சிங்களம் மாத்திரமே என்ற கொள்கையுடன் தமிழ் மொழிக்கும் நியாயமான அந்தஸ்து என்ற கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்பொழுது சம அந்தஸ்து என்ற மேல்வாரியான சுலோகம் சிங்கள மொழியுடன் தமிழ் மொழி வகிக்கவேண்டிய நிலையை போதிய அளவுக்கு விளக்குவதாக இல்லை.

இதை விபரமாகவும் திட்டவட்டமாகவும் விளக்கவேண்டியிருப்பதோடு தேசிய மொழிகள் இன்றும் எதிர்காலத்திலும் வகித்துவரவேண்டிய நிலையையும் தெளிவாகக் கூற வேண்டும்.

எனவே, தமிழ் மக்களையே கொண்ட தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரசும் சம அந்தஸ்து என்ற சொற்றொடரின் பொருளைத் தெளிவாக வரை

(9ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த யுத்தம் ?

யாழ்ப்பாணத்திலே வேட்டி கட்டிய ஒரு வெள்ளைக்கார வாலிபரைக் கண்டேன். இரண்டு வருடங்களுக்கு முன்பாகஇங்குவந்திருந்தஸோல்பரி பிரபுவின் மகனை "ஆனைக் குட்டி சாமி"யைப் போலிருந்தார்.

(தமது ஒரே புதல்வர் சாமியாரானது ஸோல்பரி பிரபுவுக்கு மிக வருத்தமாம். எப்படியாவது அவரைத் திருப்பி சீமைக்கு அனுப்பிவிடுமாறு இங்குள்ள சில நண்பர்களுக்கு எழுதியதன் மீது, அவர் சீமைக்கு சில மாதங்களுக்கு முன் திரும்பிவிட்டார்).

சென்றவாரம் நான் கண்ட வாலிபர் ஒரு ஜேர்மனியர். காலில் செருப்பு, இடுப்பில் வெள்ளை வேட்டி,மேலுக்கு ஒரு ஜிப்பா பால்வடியும் முகம் ஆறடி உயரம் ஆஜானுபாஹு சிரித்துச் சிரித்துப் பேசுகிறார். இவர் ஜேர்மனியிலே பெர்லின் நகரைச் சேர்ந்தவராம்.

-இன்சினீயர் சீன வைத்திய முறையும் பயின்றவர். ஜேர்மனியில் சீன வைத்தியமுறையும் கற்பிக்கிறார்களாம்!

* * *

செல்வச்சன்னிதியிலே புனிதமான ஆசிரமம் கட்டிக்கொண்டு ரிஷியைப்போல் வாழும் "கௌரிபாலா" என்ற ஜேர்மன் சாமியாரைப் பார்க்க வந்தீர்களா? என்று கேட்டதற்கு "நான் இலங்கைக்கு வந்தது, மனச்சாந்தியின் ரகசியத்தை அறியத்தான்!" என்றார்.

மனச்சாந்தியின் ரகசியத்தைத்தேட,இலங்கைக்கா, அதுவும் இந்தச்சமயத்திலா ஜேர்மனியிலிருந்து வரவேண்டும்! அட கடவுளே! இலங்கை பொதுவாழ்விலே இன்றுள்ள குழபத்தைப்போல், என்றும் இருந்துள்ளதா?

* * *

கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் ஒன்றுசேர முடியாதா? என்று கேட்டேன்.

லிப்பெல்ட் (அதுதான் அவர் பெயர்) இதைக் கேட்டதும் பெருமூச்சுவிட்டுவிட்டு "சேருவது முடியும்தான், ஆனல் அது அடுத்த யுத்தத்துக்குப்பின்தான் சாத்தியமாகலாம்போலும்" என்றார்.

"அடுத்த யுத்தமா? அப்படியென்றால் மற்றோர் யுத்தம் வரப்போகிறதா?"

"யுத்தம் நின்றுவிட்டதென்று நினைக்கிறீர்களா? இன்னும் எவ்வளவு யுத்தங்கள் வரப்போகின்றனவோ! மனிதனின் உள்ளத்தில் யுத்தம் நடக்கையில், வெளியுத்தம் எப்படி நிற்கும்? மனச்சாந்தி ஏற்படுகையில்தான் புறச் சாந்தியும் ஏற்படும்" என்று பெரிய வேதாந்தம் பேசினர்.

* * *

"மனச்சாந்தி ஏற்பட வழி என்ன?"

"அதை அறியத்தான் இலங்கை வந்தேன். இங்கு சில பெரியார்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தரிசித்துச் சில உண்மைகளை அறிந்தேன். அதைப்பற்றித்தான் சிந்தித்து வருகிறேன்" என்று பணிவாகச் சொன்னர்.

முன்னர் மாக்ஸ்முல்லர் என்ற ஜேர்மனியர்தான், சமஸ்கிருத நூல்களை ஆராய்ந்து, மொழிபெயர்த்து இந்தியாவின் மதிப்பை உலகத்துக்கு உணர்த்தினர். அதேநாட்டிலிருந்து இன்று மற்றோர் ஜெர்மனியர் இங்கு வந்து, சாந்தியின் ரகசியத்தை நம்மிடமே அறிந்து நமக்குத் தெரிவிக்கவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எப்படியோ நமக்கு வேண்டியது சாந்திதானே!

—ஐயாறன்

# 'தமிழுக்காக உழைப்பேன்'

## பட்டின சபைத் தலைவர் உறுதி

— நமது நிருபர் —

மட்டக்களப்பு

சென்றவாரம் நடைபெற்ற பட்டினசபைத் தலைவர் தேர்தலில் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் பத்துக்கு ஏழுவாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினுர். அவர் வெற்றி பெற்றதும் தாம் ஒரு சுயேச்சை அபேட்சகராக நின்று வெற்றியீட்டியதாகப் பிரகடனப் படுத்தியதுடன் தமிழுக்கும், தமிழருக்கும் உழைக்க உறுதி பூண்டிருப்பதையும் வெளிப்படுத்தினுர்.

பட்டினசபைத் தலைவர் பதவியில் தங்கள் ஆதரவாளரைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமெனத் தமிழரசுக்கட்சி செய்த முயற்சி பலிக்கவில்லை.

திரு. கனகசபைக்குப் போதிய ஆதரவு கிடையாமற் போகவே 10-ம்வட்டாரப்பிரதிநிதி பி. எஸ். கனகசபையின் பெயரைப் பிரேரித்தனர். ஆனுல் அனுபவம் வாய்ந்த அங்கத்தவரான திரு. பி. எஸ். கனகசபை அப் பதவி தமக்கு வேண்டாமென அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்டார். அவர் அதற்குக் காரணம் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஒரு தமிழ் ஆசிரியர் பட்டினசபைத் தலைவராவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமென்ற எண்ணத்துடன் நேற்றுவரை காத்திருந்தேன். ஆனுல் எவருமே என்னைத் தேடவில்லை. ஆனுல் இன்ருே என்னைக் கேளாமலே என் பெயர் பிரேரிக்கப்பட்டது. குத்துக்கரணமிட்டுவரும் இந்தச் சீதேவியை வரவேற்க நான் விரும்பவில்லை. அதனுலேயே அதனை மறுத்துவிட்டேன்." என்ருர்.

திரு. எஸ். கணேசமூர்த்தி உப தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சென்றமுறை திரு. ஆர். கதிரவேலுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு தலைவராகிய திரு. ஏ. எஸ். டி. கனகசபை அவ்வொப்பந்தப்படி ஒன்றரை ஆண்டின் பின் தலைவர் பதவியைத் திரு. ஆர். கதிரவேலுக்குக் கொடுக்கவில்லை. அத்துடன் உப தலைவர் பதவியை திரு. எஸ். கணேசமூர்த்திக்கும் அளிக்கவில்லை.

### இரண்டாம்முறை தலைவர் பதவி

பட்டினசபைத் தலைவர் பதவியை இரண்டாம்முறை வகிக்கும் பாக்கியம் இதுவரை எந்த ஒருவருக்கும் கிடைக்கவில்லை. ஆனுல் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் இப் பரம்பரையைமாற்றி இரண்டாம்முறை தலைவராக்கப்பட்டுள்ளார். இவரது நிர்வாகத்தில் நகரசபை நிர்வாகம் சிறப்பாக நடைபெறும் என்பது பொதுமக்களின் நம்பிக்கை.

# மொழிக் கொள்கை

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

யறுத்துக் கூறவேண்டும். தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெறுதற்கு இக்கட்சிகள் முயற்சிக்கும் இந்நேரத்தில் இச் சொற்ருெடரைத் தெளிவுபடுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

அரசாங்க மொழி இன்னதென்றும், சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு எம்மொழி அவசியம் என்றும் தெளிவாகக்கூறவேண்டும். ஒரு சுதந்திர நாட்டிற்குச் சுதந்திரத்தின் அறிகுறிகளாக கொடியும் சின்னமும் இருப்பதுபோல் அரசாங்க மொழியும் இருக்க வேண்டும்.

ஆங்கிலம் ஒரு உலக மொழி ஆகையினுல் இக்கடமையை அதனுல் மிகச் சிறப்பாக நிறைவேற்ற இயலும். ஆனுல், புதிதாக சுதந்திரத்தைப் பெற்ற இலங்கை மக்கள் ஒரு பிறநாட்டு மொழியை எத்தகைய சிறப்புக்களை கொண்டதாக இருந்தாலும் தங்களின் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

சிங்களம் தமிழாகிய இரு மொழிகளையும் சர்வதேசத் தொடர்புகளுக்கு உபயோகிப்பதற்கு பிறநாடுகளை அங்கீகரிக்குமாறு கோரவும் முடியாது. எந்நாட்டிலும் ஒரு மொழியே சர்வதேசத் தொடர்புகளுக்கு உபயோகத்தில் இருப்பது மரபு.

சுருங்கக்கூறின் இதுவே இலங்கை அரசாங்க மொழிப் பிரச்சினை. இப்பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார விருத்தி போன்ற மற்றப் பிரச்சினைகளையும் விட முக்கியமானதன்று.

என்ருலும் இலங்கைவாழ் இனங்களிடையே உள்ள மனக்கசப்பையும் பதட்ட நிலையையும் போக்கி நேச மனப்பான்மையை வளர்ப்பதற்கு மொழிப் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டியது அவசியம்.

தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய தமிழ் மக்களையே கொண்ட கட்சிகள் சம அந்தஸ்து என்ற சொற்ருெடரின் பொருளை தெளிவாக்கி மார்ச் 19-ந் திகதி பொதுமக்கள் தெளிவான விளக்கத்துடன் தீர்ப்பளிப்பதற்கு வகைசெய்வார்களா?

எம். கே.

யாழ்ப்பாணம்.

# இந்தியருக்கெதிராக தேர்தல் பிரசாரம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளுக்கெல்லாம் இந்தியரும், தமிழருமே காரணமெனப்படுகின்றது. எப்படியாவது இந்தியரைத் துரத்திவிட்டுத் தமிழர்களைத் தமிழ் பிரதேசங்களுக்கு அனுபபிஞல் இலங்கையின் குறைபாடுகள் எல்லாம் தீர்ந்து விடுமாம். இத்துடன் திரு. பிலிப் மதவெறியையும் கலந்து ஊட்டுகின்ருர். மருதானையில் ஒரு கூட்டத்தில் பேசும், பொழுது, ஐ. தே. கட்சி லங்கா பிரஜா தந்திரக் கட்சி ஆகியவற்றிற்கு கத்தோலிக்க திருச்சபை பொருளுதவி செய்வதாகக் கூறினுர். இதற்கு ஒரு காரணமும் கண்டு பிடித்து விட்டார். எம். ஈ. பி. அரசாங்கமமைக்க நேர்ந்தால் உதவி பெறும் பாடசாலைகளையெல்லாம் அரசாங்கம் ஏற்று நடத்துமென்றும், இதனுல் கத்தோலிக்கர் பயந்து விட்டதாகவும் கூறினுர்.

### அடுத்த பிரதமர்!

திரு. மெத்தானந்தா வழக்கம் போல இலங்கையின், பொலிஸ், இராணுவம் ஆகிய பிரிவுகளின் தலைமைப் பீடம், பௌத்தர்கள் அல்லாதவர்களிடமே இருக்கின்றதென்று தமது பிரசாரத்தை ஆரம்பித்திருக்கின்ருர். அது மட்டுமின்றி திரு. பிலிப் குணவர்த்தனவே இந் நாட்டின் அடுத்த பிரதமர் எனவும் முடிவாகக் கூறியுள்ளார்.

இவர்களின் பேச்சுக்களைக் கேட்டு, இவர்களின் கொள்கைகளை ஆராய்ந்து, தீர்ப்பளிக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது. மக்கள் இந்த சந்தர்ப்பத்திலே தங்களுக்கு வேண்டியது நாட்டைப் பிளவுபடுத்தும் பிற்போக்குச் சக்திகளா அன்றேல் ஒருமையா என்பதை முடிவு செய்யலாம்.

# சிட்னியின் வருகை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்பு மேலும் சில அமைச்சர்மார் பதவியிழந்து, புதியபலர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். இன்று ஒரு புதிய அமைச்சே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

நாட்டின் பாதுகாப்புக்காக இப்புதிய அமைச்சுத் தோன்றியதாகத் தெரியவில்லை. திரு. சிட்டினி டி' சொய்சாவுக்கு ஒரு பதவியளிக்கும் முகமாகவே இப்புதிய அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அரசியல்வாதிகள் அபிப்பிராயப்படுகின்றனர். மேலும் இந்த அமைச்சின்கீழ், பொலிஸ் பகுதியும் அமைகின்றது. ஆனுல் இந்த மாற்றத்தைப்பற்றியோ அன்றி இப்புதிய அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருப்பதையோ பற்றி, மற்ற அமைச்சர்களுக்கு, ஏன் நீதியமைச்சருக்குத்தானும் ஒன்றுமே தெரியாதென கையை விரித்துவிட்டார். வேறு எதனையும் அவர் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறவில்லை.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, 'அடுத்த மார்ச் மாதத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுமா?' எனச் சந்தேகம் ஏற்படுகின்றது. நாட்டின் எந்தப் பாகத்திலாவது இன்ஞெரு விபத்து ஏற்பட்டால் உடனே அவசரகால நிலமை பிரகடனப்படுத்தப்பட்டு பொதுத் தேர்தல் காலவரையின்றிப் பின் போடப்படலாம்.

# கொழும்பு நீர்ப்பாசன பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

சென்ற வெள்ளிக்கிழமை (15-1-60) இரவு இரத்மலானை நீர்ப்பாசனப் பகுதிப் பண்டகசாலையில் ஏற்பட்ட தீவிபத்து, தற்செயலாக நேர்ந்ததல்லவென்றும், இது சதிச்செயல் எனவும் பிரதமர் திரு. தஹநாயக்கா கூறியுள்ளார்.




# சுயநலத்தை மாற்றி, மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியுமா? "முடியும்"

வாஷிங்டன் நகரிலே ஒருவிருந்துஉபசாரம் நடந்தது. அச்சமயம் ஒரு ருஷிய இராஜ தந்திர பிரமுகரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. வல்லரசுத் தலைவர்கள் மாநாடு (உச்சி மகாநாடு) நடைபெற வேண்டியதைப்பற்றிய பேச்சுகள் வெகுவாக நடந்துவந்த சமயம் அது. அப்பேச்சுகளில் நானும் சம்பந்தப்பட்டிருப்பதாக நினைத்து அந்த ருஷியர் என்னை அணுகி, "கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு ஒரு பெரிய வாய்ப்புண்டு. உலகெங்கும் நிலையை மாற்றிவிடக்கூடிய மிகபலமான கொள்கை லட்சியம் எங்களுக்கு இருக்கிறது.மேற்கத்தியநாடுகளுக்கோ மிக பலவீனமான லட்சியக் கொள்கையே உள்ளது" என்ருர்.

நான் கேட்டேன் "மேற்கு நாடுகளுக்கு இலட்சியக் கொள்கை எதுவுமே உண்டா?" என்று. உடனே, அந்த ருஷியர்குலுங்கக் குலுங்கச் சிரித்து, "இல்லை, இல்லை, மேற்கு நாடுகளுக்கு இலட்சியக் கொள்கையே கிடையாது" என்ருர்.

அச்சமயம் ஒரு எதியோபிய இராஜ தந்திரி அங்கு வந்தார். என்னை அவருக்குத் தெரியும். என் கையைக் குலுக்கிவிட்டு, "பிராங்க் புக்மன் சுகமா?" என்று விசாரித்தார். இதைக் கேட்ட ருஷியர் திடுக்கிட்டார். எதியோபியர் சென்றபின் "நீங்கள் எம். ஆர். ஏ. யா? (தார்மீக புனருத்தாரண இயக்கத்தைச் சேர்ந்தவரா?) நீங்கள் எங்களுக்கு விரோதமானவர்கள்" என்ருர்.

### எதிர்ப்பானதன்று

அது சரியல்லவென்று நான் கூறி, "எம். ஆர். ஏ என்னும் தார்மீக புனருத்தாரண இயக்கம், கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிர்ப்பானதல்ல. ஆனல், இது கம்யூனிஸத்துக்குத் தக்க பதில் அளிக்கின்றது. கம்யூனிஸத்துக்கு அடிப்படைக் காரணங்கள் எவையோ அவற்றைக் குணப்படுத்துகின்றது. பிளவுபட்ட குடும்பம், பிளவுபட்ட நாடு, பிளவுபட்ட உலகம் இவற்றுக்கெல்லாம் தக்க பரிகாரத்தை அது அளிக்கக் காத்துள்ளது. எப்படியெனில் மனிதரின் மனப்பான்மையையே மாற்றுவதின் மூலம்தான்" என்றேன்.

"கம்யூனிஸத்தைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்" என்று கேட்டார் அந்த ருஷியர்.

"அது தற்கால மனிதனின் தத்துவமாகும். உங்களுடன் யார் ஒப்பவில்லையோ அவர்களை எல்லாம் ஒழித்துக்கட்டிவிட வேண்டுமென்பதே அதன் கொள்கை. சங்கடங்களைத்தீர்ப்பதற்குப் பதிலாக அதிக சங்கடங்களை சிருஷ்டிக்கின்றது. இந்த மருந்து மிகவும் உளுத்துப்போனது. இக்காலத்துக்கு ஒவ்வாதது" என்றேன்.

"மனிதனிலுள்ள சுய நலப் பேராசைகளை நீக்கவும், அவர்களை ஐக்கியப்படுத்தவும் எம். ஆர். ஏ யால் முடியுமென்று உண்மையாய் நம்புகிறீர்களா?" என்று கேட்டார் ருஷியர். உலகில் பல பகுதிகளிலும் இந்த மாறுதல் ஏற்கெனவே, பெரிய அளவில் ஏற்பட்டு வருவதாகத் தெரிவித்தேன்.

### இரண்டு கொள்கைகள்

இன்று இரண்டே இலட்சியக் கொள்கைகள் உலகின் மனதைக் கவர முனைந்துள்ளதாயும் ஒன்று கம்யூனிஸம் மற்ருென்று எம். ஆர். ஏ. என்றும், எது மேலானதென்பதை உலகமே தெரிவு செய்யவேண்டுமென்றும் ருஷியர் கூற, இச்சம்பாஷணையும் முடிவுற்றது.

"கடவுள் என்ற கட்டுக்கதை மனிதனின் உள்ளத்திலிருந்து நீங்காதவரை நமது போராட்டம் வெற்றி பெருது" என்ருர் லெனின். "மனிதன் கடவுளால் ஆளப்பட இசைய வேண்டும். இன்றேல், கொடுங்கோலர்களால்தான் அவன் ஆளப்படுவான்" என்று எழுதினர் வில்லியம்பென்.

குருசேவ் தமது கொள்கையே உலகத்தை ஆளப்போகிறதென்றும், வெகு சீக்கிரத்தில் இது கைகூடுமென்றும் உண்மையில் நம்புகின்ருர்.

ஐசனேவர், சுதந்திரமான வாழ்க்கை முறையை ஆதரிக்கிருர். ஆக்கிரமிப்பாளர்களைத் தடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு, அதற்கான பலத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிருர்.

பிராங்க் புக்மேனே உலகத்தைப் புதிதாகத் திருத்தி அமைக்க வேண்டுகிருர். "மனிதன் செவி மடுத்துக் கேட்டால், கடவுள் பேசுகின்ருர். கடவுள் கூறுவதற்குக் கீழ்ப்படிந்து நடந்தால், கடவுள் அவரைக் கருவியாகக் கொண்டு காரியங்கள் செய்து கொள்ளுகின்ருர்" என்று அவர் நம்புகின்ருர். மனிதர் மாறும்போது தேசங்களும் மாறுகின்றன.

### தர்ம நெறிகள்

உலகில் தார்மீக, ஒழுக்க நெறிகள் மிகவும் குன்றி வரு

15ஆம் பக்கம் பார்க்க




கண்ணேட்டம் 23

## வாக்காளர் கடமை

பொதுத் தேர்தல் வந்துவிட்டது. இன்னும் இரு மாதங்களில் இலங்கையிலே பொதுத் தேர்தல். பொது மக்களுக்குப் பெரிய பொறுப்பை அளிக்கும் வாய்ப்பு, இத்தேர்தலினல் ஏற்பட்டு விடுகின்றது. இந்த வாய்ப்பை அவர்கள் நல்ல முறையிற் பயன்படுத்த வேண்டியவர்களாகவிருக்கின்றனர்.

பற்பல கட்சிகள் பல்வேறு கொள்கைகளுடன் இத்தேர்தலிற் போட்டியிடுகின்றன. இவையெல்லாமே நாட்டுக்கு நன்மையையும், சுபிட்சத்தையும், அமைதியையும் தரப்போவதாகப் பிரசாரம் செய்கின்றன.

இந்தக் கட்சிகளில் எதை நம்புவது, எதை நம்பாது விடுவது என்பது தான் வாக்காளப் பெரு மக்களை எதிர்நோக்கி நிற்கும் பெரிய பிரச்சினையாகும். இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சுலபமான காரியமல்ல.

இருபத்து மூன்று கட்சிகள் அரசியல் அரங்கத்தில் தோன்றியிருக்கின்றன. இவற்றில் சில தனித் தமிழ்க் கட்சிகள்; சில தனிச் சிங்களக் கட்சிகள்; சில தொழிலாளர் கட்சிகள்; சில முதலாளி வர்க்கத்தினரின் கட்சிகள். இப்படி வேறும் பல. இவையெல்லாம் ஒருங்கே சேர்ந்த 'சாம்பார்' கட்சிகளாக விளங்குகின்றன இன்னும் சில. இந்தக் கட்சிகளை விட, சுயேச்சையாளரும் இம்முறை பெருவாரியாகப் போட்டியிட முன்வந்துள்ளனர்.

நாடு இன்று அபாயகரமான ஒரு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. எந்த நேரமும் வகுப்புவாதப் பேய் தலை விரித்துத் தாண்டவமாடக் கூடும். இந்த நெருக்கடியான நிலைமையில்தான் இலங்கை வாழ் மக்கள் இன்று வாழ்ந்து வருகின்றனர். இந்த வருடம் பிறக்கும்போதே துரதிருஷ்டவசமானவொரு சம்பவம் நடைபெற்றது. யாழ்ப்பாணம்-கொழும்பு ரயில் விபத்தை யார்தான் மறப்பார்கள்? அப்பாதையில் செல்லும் ரயிலைக் கவிழ்ப்பதற்கு மீண்டும் சதிவேலை நடைபெற்றிருக்கின்றது.

இந்த நிலையில், வாக்காளர்களிற் சிலர் அரசியலை அறவே தள்ளிவிட்டுப் பேசாதிருத்தல் தவறு. தங்கள் கடமையை அவர்கள் நல்ல முறையில் நிறைவேற்றவேண்டும்.

## சீன — இந்தோனேஷியா சமரச ஏற்பாடு

இந்தோனேஷியாவிலே நாட்டுப் புறங்களில் கடைவைத்து வியாபாரம் நடத்திவந்த சீனர்களை எல்லாம், நகர்ப்புறங்களுக்கு மாற்றி, அங்கு உள்ளூர் மக்களுக்கே வியாபார உரிமை அளிக்கப்பட்டது.

இதற்கு அந்நியர் துவேஷம் காரணமல்லவென்றும் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாயும், இந்தோனேஷிய அரசாங்கத்தார் கூறுகின்றனர்.

இவ்விஷயமாக சீனத்துக்கும் இந்தோனேஷியாவுக்கும் ஏற்பட்டிருந்த தகராறு சமரசமாகத் தீர்ந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# சிறுவர் பகுதி

## உண்மைக் கதைகள்


### பனமாக் கால்வாய்-III



**நுளம்பு:—** 1904இல் பனமாக் கால்வாயை ஐக்கிய அமெரிக்கா கையேற்றபோது அமெரிக்க விஞ்ஞானிகளும் டக்டர்களும் நுளம்பு தான் மஞ்சள் காய்ச்சலேயும் மலேரியாவை யும்பரப்புகின்றது என்பதைத் திட்டமாக அறிந்தார்கள். ஆகையால் நுளம்புகள் பரவுவதற்குக் காரணமாயிருந்த ஐக்கிய அமெரிக்க அதிகாரிகள் சேறும் சகதியும் நிறைந்த இடங்களேச்சுத்தப்படுத்த முனேந்தார்கள்.



**கேனல் ஜோர்காஸ்:—** கியூபாவில் மஞ்சள் காய்ச்சலேயும் மலேரியாவையும் குணப்படுத்திய கேனல் ஜோர்காஸ் என்பவர் கால்வாய்ப்பகுதியின் சுகாதாரப் பொறுப்பைக் கவனிக்க நியமிக்கப்பட்டார். மிகவும் ஊக்கமும் சலியா உழைப்புமுள்ள அவர் 500 சதுர மைலிலுள்ள அசுத்த நீரை அகற்றியதோடு அங்குள்ளோருக்கும் சுகாதாரத்தை அறிவுறுத்தினர்,



**பலாபலன்கள்:** ஜோர்காஸ் உடைய திட்டங்கள் நல்ல பலன்களே அளித்தன. அவர் நுளம்புகளேப் பரவாமல் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்தார். 11 கோடி கியூபிக் அடிகளேப் புகையூட்டி குப்பை கூழங்களே உடனே அகற்றினர் மஞ்சள் காய்ச்சலும் மலேரியாவும் மறைந்தன. கால்வாய் வேலேயாட்களும் பனமாவில் வசித்த ஏனேயோரும் இதனல் நலம் அடைந்தனர்.

(தொடரும்)

## பாலுவின் தந்திரம்

ப. ஸ்ரீபதி — பதிவு எண். 603

பாலுவும், இராமுவும், இணே பிரியாத சிநேகிதர்கள். பாலுவைச் சினிமாக் கொட்டகையிலோ, கடற்கரையிலோ காண நேர்ந்தால் இராமுவையும் அங்குக் காணலாம்.

பாலு நல்ல குணம் உடையவன். பொய் என்பது அவன் வாயில் இருந்து வராது. ஆனல் இராமு, பாலுவுக்கு நேர்மாருனவன். பொய் சொல்வதில் பெருமை கொள்பவன். களவெடுப்பதில் கைதேர்ந்தவன். தன் நண்பன் தீய செயல்களேச் செய்கிருனே எனமனம் நொந்து கொண்டான் பாலு. இராமுவைத் திருத்தி நல்வழிக்குக்கொண்டு வர வேண்டும் என எண்ணினன் பாலு.

ஒரு நாள் பாலு வழக்கம் போல் ராமுவை விளேயாட அழைத்தான். இராமு தனக்குத் தலேயிடி எனச் சாட்டுச் சொல்லிபாலுவை அனுப்பிவைத்தான். பாலு விளேயாட்டு முடிவில் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான், வரும் வழியில் சிவஞானம் செட்டியார் வீட்டிலிருந்து இராமு பதுங்கிப் பதுங்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டுகொண்டான். அவன் எதையோ திருடி விட்டானென்பதை அறிந்த பாலு, இராமுவைத் திருத்த இதுதான் தருணம் என எண்ணி ஒரு வைரவர்கோவிலுள் பதுங்கி இருந்தான். இராமு வைரவ கோயிலேத் தாண்டும் சமயம் வைரவரின் பின் மறைந்திருந்தபாலு, "டேய் பொடிப் பயலே! எங்கே ஓடப்பார்க்கிருய்? இப்படிவா!" என்று அதட்டினன். இராமுவின் கால்கள் நடுங்கத் தொடங்கின, உடம்பு வியர்த்துக்கொட்டியது. இராமு திடுக்கிட்டுத் திரும்பினன். "என்னடா முழிக்கிறே? என்னேத் தெரியவில்லேயா உனக்கு? இப்படிக் கோயில் அருகே வா!" பாலு மீண்டும் அதட்டினன். இராமு கோயில் அருகே வந்து, "யாரு பேசுகிறது? ஒருத்தரையும் காணவில்லேயே" என்ருன். பாலு ஓர் அசட்டுச் சிரிப்புடன், "என்னேத் தெரியவில்லேயா? நான்தான் வைரவர் பேசுகிறேன். நீ திருடியது எனக்குக்கூடவா தெரியாது? கடவுள் எங்கும் இருக்கிருர் என்பதை நீ அறியவில்லேயா? அற்ப பயலே! மரியாதையாகத் திருடிய பொருளே எடுத்துக் கீழே வை இல்லாவிடில் இன்று இரவு படுக்கையில் இறந்து விடுவாய்," என்ருன். "ஐயோ! வைரவரே! என்னேக் கொன்றுவிடாதேயும்! இதோ இருக்கிறது திருடிய பணம், எடுத்துக் கொள்ளும். நான் போய்வருகிறன்." என்று கூறிவிட்டு ராமு திரும்பி நடந்தான். "நில்! இதை உன் ஞாபகத்தில் வைத்திரு. நீ எங்கேயாவது இனிமேலும் திருடுவதைக் கண்டேனுகில் உன்னே உயிரோடுவிடமாட்டேன். ஜாக்கிரதை!" இராமு பேசக்கூடச் சக்தி இல்லாது திரும்பி நடந்தான். பாலு நிலத்தில் இருந்த பொருளே எடுத்துக்கொண்டு சிவஞானம் செட்டியார் வீட்டுக்கு ஓடினன்.

சிவஞானம் செட்டியார் முற்றத்தில் அங்கும் இங்குமாக நடந்துகொண்டிருந்தார். அவர் முகத்தில் கோபத்தின் அறிகுறி தென்பட்டது. அவர் மனேவி ஒரு மூலேயில் அழுது புலம்பிக்கொண்டிருந்தாள். பாலு சிவஞானம் செட்டியாரிடம் பணத்தைக் கொடுத்து நடந்ததைக் கூறினன். அவர் பாலுவின் நல்ல குணத்தைப் புகழ்ந்து பண முடிச்சொன்றை அவனுக்குப் பரிசாகக்கொடுத்தார். பாலு, பணத்துடன் இராமுவின் வீட்டுக்குச் சென்ருன். இராமு சோகமே உருவாக உட்கார்ந்திருந்தான். "என்னடா இராமு! ஒரு மாதிரியாய் இருக்கிருய்?" என்று பாலு கேட்டான். இராமு நடந்ததைக் கூறினன். அதற்குபாலு சிரித்தான் "டேய்பாலு! அழவேண்டியநேரத்தில் ஏண்டா சிரிக்கிருய்?" என்ருன் இராமு ஆத்திரத்துடன்.

"வைரவர் பேசவில்லேயடா நான்தான் பேசினேன்" என்ருன் பாலு, மீண்டும் சிரித்துக்கொண்டே. "நீயா! கொஞ்சம் விளக்கமாகச்சொல்லேண்டா!" இராமு சலிப்புடன் கேட்டான். பாலு நடந்ததைக் கூறித் தனக்குக் கிடைத்த பரிசுப்பணத்தையும் காட்டினன். இராமு தன் ஏமாற்றத்தை எண்ணி வெட்கப்பட்டான். இனி ஒரு நாளும் களவு எடுப்பதில்லே என்று சத்தியமும்செய்தான் இராமு. பின் இருவரும் பணமுடிச்சிலுள்ள பணத்தைத் தமக்குள் பகிர்ந்து கொண்டார்கள்.

## எங்கள் குதிரை

காடு மேடு எங்கும் திரியும்  
கள்ள மில்லா குதிரை – எங்கள்  
கள்ள மில்லா குதிரை.

காற்றை விடவே கடுகி யோடும்  
கால்கள் கொண்ட குதிரை - நீண்ட  
கால்கள் கொண்ட குதிரை.

செம்மண் நிறம் கொண்டி லங்கும்  
சிறப்பு மிக்க குதிரை – எங்கள்  
சிறப்பு மிக்க குதிரை.

—பெ. கண்ணன்

செல்வக் குழந்தைகளே,

அனேவருக்கும் வணக்கம். கட்டுரை, கதைகளே கடதாசியின் ஒரு பக்கத்தில் எழுதி அனுப்புங்கள். மருமக்களிற் பலர் இதனே மறந்து போய் இரண்டு பக்கங்களிலும் எழுதி விடுகின்றனர். அத்துடன் பதிவு எண்ணும் குறிப்பிட வேண்டும். இவற்றை அனேவரும் கவனித்து ஒழுக வேண்டுமென மீண்டும் நினேவூட்டுகின்றேன்.

சின்னமாமா

## விஞ்ஞான வளர்ச்சி

நடராசா சற்குணசிவம் — பதிவு எண். 159

இன்றைய உலகமானது விஞ்ஞான வளர்ச்சியினுல் மேம்பட்டிருக்கின்றது. மனித வர்க்கத்திற்கு இன்றியமையாத எத்தனேயோ சௌகரியங்களே விஞ்ஞானம் கொடுத்திருக்கின்றது.

இன்று பாமரர் பணக்காரர் என்ற பேதமின்றி எந்த மக்களும் கல்வி கற்க விஞ்ஞானம் வசதி செய்திருக்கின்றது. இந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் மக்கள் கஷ்டப்படாமல் சிறிது நேரத்திற்குள் இலட்சக் கணக்கான எண்களே இயந்திரத்தின் உதவியால் கூட்டுகின்ருர்கள். விஞ்ஞான வளர்ச்சியின் பயனுக புதினங்களே அறியவும் பல மைல்களுக்கு அப்பாலிருந்து பேசுவோரை நாம் பார்க்கவும் கூடியதாக இருக்கின்றது.

பண்டைக் காலத்தில் மக்கள் போதிய போக்குவரத்து வசதி இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். இன்று கணக்கற்ற விமானங்களும் நீராவிக் கப்பல்களும் நினேத்த நிமிடத்தே நாம் வேண்டிய இடத்திற்குச் செல்லத் துணேபுரிகின்றன. விஞ்ஞானத்தால் விவசாயமும் வளர்ச்சியுற்று வருகின்றது. பலகோடி வருடங்களாகக் கவனிக்கப்படாது கிடந்த பற்றைக்காடுகள் எல்லாம் பசும் பயிர்க்கொடிகள் நிறைந்தனவாயும், வரண்ட பாலே வனங்கள் எல்லாம் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலேகளாகவும் காட்சி அளிக்கின்றன. அக்காலத்தில் குணப்படுத்த முடியாமல் இருந்த நோய்களே எல்லாம் தற்போது விஞ்ஞானத்தின் உதவியால் வெகு இலகுவில் குணப்படுத்துகிருர்கள்.

உலகத்தில் கணக்கில்லாத ஆராய்ச்சிகளேச் செய்ததும் அல்லாமல் தற்போது எத்தனேயோ மைல்களுக்கப்பால் இவ்வளவு காலம் வரைக்கும் அறிய முடியாமல் இருந்த சந்திரமண்டலத்திற்கும் ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டு விட்டார்கள் விஞ்ஞானிகள். இந்த மகத்தான வெற்றியை ஈட்டிய பெருமை விஞ்ஞானத்தையே சாரும்.

விஞ்ஞானத்தை நல்ல முறையில் பயன்படுத்தினுல் மக்கள் சமுதாயம் முன்னேறுவதோடு நலமும் அடையும்.

## புதிய மருமக்கள்

(பெயரும் பதிவு எண்ணும்)

682. ஜெகதீசன் கந்தையா,  
A/9, அரசாங்க விடுதி,  
திருக்கோணமலே.

683. செல்வரத்தினம் யோசுவா,  
உடுவில்,  
சுன்னுகம்.

684. ரி. புவனேந்திரன்,  
மே/பா திரு. ஸி. சின்னத்தம்பி,  
சங்கானே மேற்கு,  
பண்டத்தரிப்பு.

685. பொன்னுத்துரை,  
மலர்தேவி,  
மாலிய வத்தை,  
சங்கானே.

686. இராசையா ஸ்ரீதரன்,  
685/1, கே. கே. எஸ். ரோட்,  
யாழ்ப்பாணம்.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனேவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்கு வெளியாகும் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 30–1-60க்கு முன்னர் சின்னமாமா, 'ஈழநாடு சிறுவர்பகுதி', தபாற்பெட்டி எண் 49. யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்  
(23-1-60)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு  
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னே ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..................................................

விலாசம்..............................................

..................................

..................................  
கையொப்பம்

பெற்ருர் அல்லது  
ஆசிரியரின் கையொப்பம். வயது............



# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 19. மன இருளில்

தோணியிலிருந்து எல்லாரும் இறங்கிச் சென்ற பிறகு, வேலாயுதம் மணலிலே குந்திக் கொண்டு புகையிலையை எடுத்துச் சுருட்டுச் சுற்றத் தொடங்கினன்.

தையும் மாசியும் பின்பனிக் காலம் என்று தர்மலிங்கவாத்தியார் சொல்லியிருக்கிருர். புத்தகத்தில் அப்படி எழுதியிருக்கலாம். ஆனல் வேலாயுதம் இப்போதே பனி பெய்து கொண்டிருப்பதை உணர்ந்தான். வெடு வெடு என்று இப்போதே கூதிலாக இருந்தது.

கொஞ்ச நாட்களாக அவனுக்கு இப்படித்தான். மதியந் திரும்பியதும் உடம்பு கணப்புச் சட்டியைப் போலக் கணகணக்கத் தொடங்கிவிடும். தொட்டுப் பார்த்தால் மேல் சூடாகத்தான் இருக்கும். ஆனல் நெஞ்சுக்குள்ளே குளிர்வது போல இருக்கும். பொழுது இறங்க இறங்கக் குளிர் கூடிக்கொண்டே போவது போலத் தோன்றும். ஆனலும் உடம்பின் கணகணப்புக் குறைந்துவிட்டது என்றுஞ் சொல்லிவிட முடியாது. இன்றைக்கும் அப்படித்தான் இருந்தது.

இதற்கு முன்பெல்லாம் உடம்பின் உளைச்சலினல் இப்படி ஏற்பட்டிருக்கிறது என்று வேலாயுதம் சாதாரணமாக எண்ணிக் கொண்டான். அதற்காக முந்தநாள் இரவு வேர்க்கொம்பு, கொத்தமல்லி, சித்தரத்தை இவைகளை அவித்துக் குடித்திருக்கிருன். ஆனலும் சுகம்வரவில்லை.

'எனக்கும் வயதாகிவிட்டதே.' என்று இப்போது எண்ணிக்கொண்டு சுற்றிய சுருட்டுக்கு நெருப்பை மூட்டினன் வேலாயுதம், எதற்கும் நாளைக்கு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

துண்டினல் உடம்பை நன்ருகப் போர்த்தியபடி முளையிற் கட்டப்பட்டிருந்த வள்ளத்தைப் பார்த்தபோது வள்ளத்தடியிலே காக்கைகள் கூட்டங் கூட்டமாகக் குளித்துக் கொண்டிருந்தன.

வேலாயுதம் தனக்குள் எண்ணமிட்டுக் கொண்டான். இந்தக் காக்கைகட்கு இன்றையப் பொழுது முடிந்துவிட்டது. குளித்துவிட்டு அவை ஆறுதலாகத் தங்கள் கூட்டையடையும். நாளையைப் பற்றிய சிந்தனையோ ஏக்கமோ இன்றி அவை தம் கூடுகளிலே நித்திரை செய்யும்.

ஆனல் தனக்கு? தன்னுடைய வேலைக்கு என்றைக்குமே ஓய்வில்லை. சிலவேளை நடுச்சாமத்திற்கூட யாராவது ஒருவன் வந்து துறையைக் கடக்க வேண்டும் என்பான். அப்படி ஒருவனும் வராவிட்டாற்கூட அயர்ந்த நித்திரை வருமா? மனிதனுடைய இன்றையப் பொழுது, இன்றையத்தினத்தோடு முற்றுப்புள்ளியிட்டுத் தரித்து விடுவதில்லை. 'இன்றையப் பொழுதின் ஏக்கமும், வேதனையும், இன்பமும், துன்பமும் நாளைத்தினத்தின் வாழ்க்கையாகச் சங்கிலித் தொடராக அமைந்துவிட்டது. பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் இல்லாத நாளைய சிந்தனையை மனிதன் மட்டும் ஏன் வலிந்து வரவழைத்துக் கொள்கிருன்? இன்றையத்தொல்லைகள், இன்றையக் கசப்புக்கள், இன்றைய வேதனைகள் ஏன் இன்ருேடு தொலைந்து போகக்கூடாது?

தான் எழுப்பிய கேள்விகளுக்கு விடை சொல்ல வேலாயுதத்தால் முடியவில்லை. எனவே, சோர்ந்து போய் மணலிற் படுத்துக் கொண்டான்.

வானின் உச்சியிலே திட்டுத் திட்டான வெள்ளை மேகங்கள், அவசர அவசரமாகக் குறுக்கும் மறுக்கும் சென்று கொண்டிருந்தன. மேகங்கட்குக் கீழே, அவைகளுக்குப் போட்டியாக நாரைக் கூட்டங்கள் தங்கள் கால்களைப் பின்னல் நீட்டியவாறு நீந்திக் கொண்டிருந்தன. எண்ணிக்கையற்ற சின்னஞ் சிறு குருவிகளும், புட்களும் வான் வெளியை நிரப்பிக் கொண்டு அங்கு மிங்கும் பறந்தன.

அந்திவானத்துச் செக்கர் ஒளி எதிரே விரிந்து கிடக்கும் கொட்டியாபுரக் குடாக்கடலின் கருநீர்ப் பரப்பிற் பிரதிபலிக்கையில், தங்கத்தையுருக்கி வார்த்துவிட்டாற் போலத் தகதகவென்று மின்னியது.

இதற்குள் கடைக்காரனுக்கு தந்தி கொடுக்கச் சென்ற யோசேப் திரும்பி வந்து வேலாயுதத்திற்குப் பக்கத்தில் ஆயாசத்தோடு குந்திக் கொண்டார்.

அவனைக் கண்டதும் வேலாயுதம் எழுந்து உட்கார்ந்து கொண்டே "போவோமா தம்பி" என்று கேட்டான்.

"போவோமே" என்று இழுத்துப் பதிலளித்த யோசேப் "தூரத்தில் இன்னமும் யாரோ வருகிறது போல இருக்கிறது. அவர்களும் வரட்டுமே. போகலாம்" என்று கூறிமுடித்தான்.

"உனக்குப் போக அவசரமில்லையா தம்பி" என்று நம்பாதவன் போலக் கேட்டான் வேலாயுதம்.

"கந்தோருக்கு இனிப் போக வேண்டியதில்லை. இன்றைக்கு வேலை முடிந்து விட்டது. இனி ஏதும் தந்தி வந்தாலும் நாளைக் காலையிலேதான் கொடுப்பேன்" என்ருன் யோசேப்.

இத்தனை நேரமும் யோசேப்பின் மேல் அநுதாபம் கொண்டிருந்த வேலாயுதத்துக்குத் திடீரென்று அவன் மேல் ஒரு பொருமை பிறந்தது. என்ன இருந்தாலும் யோசேப் தன்னை விட அதிஷ்டக்காரன் என்றுதான் வேலாயுதம் எண்ணினன். அவன் எத்தனை மைல் சைக்கிள் ஓடியிருந்தாலும், இத்தோடு அவன் வேலை இன்றைக்கு முடிவடைந்துவிட்டது. ஆனல் தன்னுடைய வேலைக்கு என்றுமே முடிவு இல்லை என்று எண்ணினன் வேலாயுதம்.

இதற்குள் துறையடிக்குப் பரமண்ணனும் இன்னுஞ் சிலரும் வந்துவிட்டனர்.

வந்தவர்களில் ஒருவன் வியாபாரி. அடிக்கடி இந்தத் துறையிலே வேலாயுதம் அவனைச் சந்தித்திருப்பினும், இன்றைக்கு அவன் வருவான் என்று எதிர்பார்க்கவில்லை. பொங்கல் போய் விட்டது. புது வருடப்பிறப்பிற்கு இன்னமும் மூன்று மாதங்களுக்கு மேல் இருக்கின்றது. இந்த நேரத்தில் சீலைப் பொட்டணி வியாபாரிக்கு என்ன வேலை இருக்கும் என்று வேலாயுதம் எண்ணிப் பார்த்தபடியே "எப்படிக் காக்கா சுகமா? கண்டு கனகாலமாச்சே. எங்கே போகிருய்'' என்று கேட்டான்.

தன் சைக்கிளைக் காலில் நிறுத்தி வைத்த லெவ்வை என்ற அந்தப் பிடவை வியாபாரி, "வெள்ளாமை வெட்டுக் காலமல்லவா? நாட்டுக்குள்ள போகலாம்" என்று பார்க்கிறேன்." என்ருன்.

ஊரிலே மூலைக்கு மூலை சீலைக் கடைகள் வந்து விட்டன. பகட்டாக மினுக்கிக் கொண்டிருக்கும் புடவைகளைக் கண்ணுடி அலுமாரிக்குள் வைத்துத் தெருவால் போகிறவர்களைக் கொக்கி போட்டு இழுத்து விலைப்படுத்தி விடுகிருர். இந்த நிலையிற் சொற்ப முதலை வைத்துக் கொண்டிருக்கும் லெவ்வையைப் போன்றவர்களும் பிடவை வியாபாரத்தின் மூலம் தங்கள் வயிற்றுப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்ள முயற்சிக்கிருர்கள். துணிச்சலான முயற்சி என்றுதான் வேலாயுதத்திற்குத் தோன்றியது.

அதனல் என்ன? உடலை மறைக்க வேண்டும் என்ற தேவையும், அதற்கும் மேலாகத் தங்கள் இயல்புக்கு மேற்பட்டவரைக் கண்டு பாவிப்பதின் மூலம் பகட்டான ஆடைகளை விரும்பும் பெண்களின் நிரந்தரமான ஆசையும் இருக்கும் வரை அவன் பிழைத்துக் கொள்வான். இந்த நம்பிக்கையிலேதான் லெவ்வை காத்தான் குடியிலிருந்து இங்கு வந்திருக்கிருன்.

இன்னமும் இரண்டு மூன்று நாட்களில் அரி வெட்டு அமோகமாக நடக்கும். விருந்திருக்க உண்ணுத வேளாளன், களத்திலே துண்டை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு வீட்டுக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டாலும், அரிவெட்டு, சூடு மிதித்தல் என்பனவற்றுக்குக் கூலியாக ஊரெல்லாம் நெல்லாக, நிறைவாக இருக்கும். அந்தத் தருணத்திலே லெவ்வை கடையைப் பரப்பினன் என்ருல் ஒரு நாளைக்கு இருபது இருபத்தைந்துக்கு வியாபாரம் நடக்கத்தான் செய்யும். புதுத் துணியைக் கண்டதும் பெண்கள் ஏன் இப்படி ஆலாப்பறக்கிருர்களோ......

வேலாயுதம் எண்ணிக் கொண்டிருக்கையிலே லெவ்வை தன் சைக்கிளைத் தூக்கி வள்ளத்துள் வைத்துவிட்டான். சீலைப்பொட்டணியையும் பலகையிலே தூக்கி வைத்து அதன் பக்கலிலேயே அவனும் அமர்ந்து கொண்டான்.

கண்ணுடியிற் பனிப்புகார் படிவது போல மேற்கே இருள் கவிய ஆரம்பித்துச் சுழித்தோடும் கங்காதேவியின் கழனிநிற மேனியின் மீதும், அதன் இரு கரையிலும் அசைந்தாடும் கோரைப் புற்களின் மீதும், அந்தக் கோரைப் புற்களின் பின்னல் நிரைத்து நிற்கும், மருதமரங்களின் மீதும், தூரத்தே தெரியும் நீலக்கடலின் மீதும், தன் சாயையைப்படிய வைத்தது. கணத்துக்குக் கணம் வலிமை பெற்றுக்கொண்டு வரும் அந்த இருளிலே தோணி மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது.

அந்த இருள் வேலாயுதத்திற்குப் பழக்கப்பட்டதுதான். காலங்காலமாக அந்த அமைதியான, இரவுகளைத் தனிமையாகவே கடத்தியிருக்கிருன், நெருப்பருகே குந்திக்கொண்டு இறந்த காலத்தின் துன்பநினைவுகளோடும், எதிர்காலத்தின் நம்பிக்கைகளோடும் ஒன்றிப் போயிருக்கிருன். அந்தகார இருளிற் கண் சிமிட்டும் நட்சத்திரங்களைப் போல, வாழ்க்கையின் ஒளி பெற்ற இன்ப நினைவுகள் அவன் மனதிற் பளிச்சிடும் போதெல்லாம், அவனுக்கு வாழவேண்டும் என்ற ஆசையும், நன்ருக வாழுவேன் என்ற நம்பிக்கையும் தோன்றத்தான் செய்தன.

இன்றைக்குக்கூட நட்சத்திரப் பூக்கள் வான வீதியெங்கும் சிதறிக் கிடந்தன, அவைகளின் கண் சிமிட்டலில் இருள் இன்றைக்கும் செயலற்றதாகவே இருந்தது. ஆனலும் வேலாயுதத்திற்கு என்னவோ மனக் கிலேசமாகத்தான் இருந்தது. அவன் மன இருளைப் போக்கக் கூடியதாக எந்த நினைவும் உள்ளத்திற் பளிச்சிடவில்லை. ஒரே இருள். இருள்தான்!

தோணி ஊர்ந்து கொண்டிருக்கையிலேயே அவன் அந்தப் பயங்கரமான வெடிச் சப்தத்தைக் கேட்டான். தொடர்ந்து 'டைனமைற்' வெடிவைத்த குற்றத்துக்காக அந்த மீன்பிடிகாரர் நால்வரும் கோட்டிலே நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவதை அவன் கண்டான். விசாரணை முடிவில் அந்த நால்வரும் சிறைச்சாலைக்குட் தள்ளப்படுகிருர்கள். அவர்கள் மனைவியரும் பிள்ளைகளும் கதறியழுகிருர்கள். இனிமேல் அனதையாகிவிட்ட அப்பெண்கட்கும் பிள்ளைகட்கும், சோறு இல்லை. வாழ்க்கை இல்லை......

இப்படியாக எண்ணிக் கொண்ட வேலாயுதம் "ஐயோ" என்று வாய்விட்டழுதான்.

தோணியிலிருந்தவர்கள் எல்லோரும் பயந்துவிட்டார்கள். இருட்டிலே தோணிக்குத்தான் ஆபத்து வந்துவிட்டதோ என்று எண்ணிக் கொண்டு,

(13ஆம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.

# மலைநாட்டில் பொங்கல் விழா

— ஸி. வி. வேலுப்பிள்ளை —

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அதிகாலையில் எழுந்தே 'லய'ங்களைச் சுற்றி பஜனை கோஷ்டிகள் பவனி வரும். சங்கும் சேமக்கலமும் மக்களைத் துயிலெழுப்பி முதல் நாளைய பீடைகளைப் போக்கடிக்கும். குளிருக்கு பாதுகாப்பாக கம்பளிகளை உடம்பில் இறுகச் சுற்றிக்கொண்டு பஜனை கோஷ்டியினர் கணீரென்ற குரலில் தேவாரதிருப்பதிகங்களைப் பாடுவார்கள். மார்கழிமாதம் முழுவதும் இப் பஜனை கீதங்களைக் கேட்கலாம்.

பெண்களும் விடியற்காலையில் எழுந்து முற்றத்தைச் சுத்தம் செய்து பசுச் சாணத்தால் மெழுகி அலங்கார கோலங்களிட்டு நாலு மூலைக்கும் பிள்ளையார் பிடித்து வைத்து பூசினிப் பூக்களால் அலங்கரிப்பார்கள்.

பொங்கலுக்கு முன்னதாகவே தொழிலாளருக்கு சம்பளமோ முற்சம்பளமோ கொடுக்கப்படும். இப்பணத்தை எடுத்துக்கொண்டு குடும்பத் தலைவர்கள் பட்டினத்துக்குப் போய் புதுப்பானையும் பொங்கலுக்கு வேண்டிய இதர சாமான்களும் வாங்கி வருவார்கள். பச்சை அரிசி, சர்க்கரை, கரும்பு, பூசினிக்காய், புதிய வஸ்திரம் முதலிய சகல பொருள்களும் வாங்கப்படும். வீடுகளும் மாட்டுத் தொழுவங்களும் வெள்ளை அடித்து கோலமிட்டு சுத்தம் செய்யப்படும்.

முதல்நாள் சூரியன் பொங்கல் அல்லது வீட்டுப் பொங்கல் நடக்கும். ஆண்களும் பெண்களும் அதிகாலையில் எழுந்து, வீட்டு வாசல்களை துப்புரவாக்கி, மாவிலைத் தோரணங்களாலும் வர்ணக் கடுதாசியாலும் அலங்காரம் செய்வார்கள். இது முடிந்ததும், ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்திக்கொண்டு தோட்டத்திலுள்ள கோயிலுக்குச் சென்று வணங்குவார்கள்.

பஞ்சாங்கத்தில் குறிப்பிட்ட சுப முகூர்த்தத்தில் வீட்டுப் பொங்கல் விமரிசையாக நடக்கும். மெழுகப்பட்ட இடத்தில் மூன்று அடுப்புகளை வைத்து கோலமிட்ட பானைகளையும் பாத்திரங்களையும் பத்திரமாக அருகில் கொண்டு வந்து வைப்பார்கள். பொங்கல் பானையைச் சுற்றி மஞ்சள் இலைகள் கட்டப்படும். பின்பு, பச்சரிசியும் பாலும் அடங்கிய பொங்கல் பானை தூக்கி அடுப்பில் வைக்கப்பட்டு நெருப்பு மூட்டப்படும்.

இன்னொரு அடுப்பில் பெண்கள் பூசனிக் கறியையும் சர்க்கரைப் பொங்கலையும் சமைப்பார்கள். பால் பொங்கி வழியும் சமயத்தில் கும்பிடுவதற்காக கை கூப்பிய வண்ணம் நிற்பார்கள் ஆண்கள். பானை கொதித்து பொங்கல் தள்ளியவுடனே, ஆண், பெண் பாலர் எல்லோரும் சேர்ந்து ஏக காலத்தில் 'பொங்கலோ பொங்கல்' என்று ஆர்ப்பரிப்பார்கள்.

சரியான சுப நேரத்தில் தலை வாழையிலையின் மீது பாற்பொங்கலும், சர்க்கரைப் பொங்கலும், வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, கற்கண்டு, சந்தனம், குங்குமம் முதலியவற்றுடன் படைக்கப்படும். பின்னர் கற்பூரமும் ஊதுவத்தியும் கொளுத்தி பூஜை ஆரம்பமாகும். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் வலம் வந்து வணங்குவார்கள். அதன்பின், படையல் வீட்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்டு காலஞ் சென்ற பிதுர்களுக்கு அர்ப்பணிக்கப்படும்.

பொங்கல் பொங்கி முடிந்தவுடனே பஜனை கோஷ்டி மறுபடியும் 'லய'த்தைச்சுற்றிவரும். ஒவ்வொரு வீட்டிலும் அவர்களுக்கு பணமும் பண்டமும் பரிசாகக் கிடைக்கும். வண்ணனும், நாவிதனும் வழக்கம்போல தலைமைக் கங்காணி, கணக்கப்பிள்ளை, துரைமார் முதலியவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பொங்கல் பரிசுகளைப் பெறுவர்.

அடுத்த நாள் நடக்கும் மாட்டுப் பொங்கலை, மாடு உள்ளவர்களே மிகவும் உற்சாகத்தோடு கொண்டாடுவார்கள். அப் பிராணிகளை குளிப்பாட்டி, எண்ணை தேய்த்து சந்தன குங்குமத்தால் சோடிப்பார்கள். குடும்பத்திலுள்ள ஆண்கள் மாட்டுத் தொழுவத்தில் கூடி நின்று பொங்கலையும் பூஜையையும் மேற்பார்வை செய்வார்கள். ஏனென்றால் அவர்களுக்குத்தான் இது முக்கியமான ஒரு தினம். பூஜையில் கலப்பை முதலிய உழவுக் கருவிகளும் வைக்கப்படும். பசுக்கள் எருதுகள் யாவற்றிற்கும் முதல் தீனி வழங்கப்படும். உழவனுக்கு மிகவும் பிரயோசனமுள்ள பசுவுக்கே இவ் விழாவில் அதிக கவனம் செலுத்தப்படும்.

மாட்டுப் பொங்கலின் முடிவில், மாடுகளின் கழுத்தைச் சுற்றி பலவித பரிசுகளைக் கட்டி அவிழ்த்து விட்டு விடுவார்கள். அவை விடுதலை கிடைத்த ஆனந்தத்தில் தோட்டமெல்லாம் சுற்றி ஓடிக் கும்மாளம் போடும். அவற்றைத் துரத்திப் பிடிக்கும் வாலிபர்களுக்கே அப் பரிசுகள் உரியன. இந்த வைபவம் பழைய விளையாட்டாகிய 'மஞ்சு விரட்டை' ஞாபகப் படுத்துவதாகும்.

இப்படிப்பட்ட ஒரு விழாவின் இறுதியில் ஏற்படும் சுக துக்கங்களுடன் அன்றைய பொழுதும் சாய்ந்து விடும். ஆனால் உண்மையில் கொண்டாட்டங்கள் முடிவுற அன்றிரவு இரண்டு மணியாகும். ஏனென்றால் வருடாவருடம் பொங்கல் விழாவின் முடிவில் நாடகம் நடிக்கப் படுவதும் ஒரு வழக்கமாகும். கடந்த ஒரு மாதமாக ஒத்திகைப் பருவத்திலிருந்து வந்த நாடகம் அன்று மேடையில் மலரும். தீபாவளிக் கொண்டாட்டத்தைப் போலவே இன்றும் ஆண், பெண், சிறுவர் சகலரும் திரண்டு வந்து நாடகம் பார்ப்பார்கள்.

நாடகத்தின் முடிவில் விழும் திரை பொங்கல் கொண்டாட்டத்தையும் ஒரு முடிவுக்கு கொண்டு வந்துவிடும்.

## துறைக்காரன்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கும் திரும்பியபடியே பேந்தப் பேந்த விழிக்கையில், வள்ளம் அப்பக்கமும் இப்பக்கமும் அலைக்கழிக்கப்பட்டு, ஆற்றிலே மூழ்கிவிடும் போலத் தோன்றிற்று.

ஆனால் இதற்குள் வேலாயுதம் விழித்துக்கொண்டு "ஆடாமல் இருங்கள்" என்று உத்தரவு போட்டான்.

தோணி தன் சம நிலையை அடைந்ததும், "ஏனப்பா பயந்துபோய் அழுதாய்" என்று கேட்டான் ஆதம் லெவ்வை.

"அழுதேனா?" என்று கேட்ட வேலாயும், பகலெல்லாம் சவளைத் தூக்கித் தூக்கி வலித்ததால், வலக்கை மூட்டெல்லாம் இற்று விழுந்து விடும்போல இருந்தது. நோவு தாங்கமுடியாமல் முனகினால் நீங்கள் எல்லாம் தோணியையே அமிழ்த்திவிடப் பார்த்தீர்களே என்று ஒரு பொய்யைச் சொல்லி வேலாயுதம் சமாளித்துக் கொண்டான்.

இதற்குள் தோணி அக்கரையை அடைந்துவிட்டது.

(தொடரும்)

## அருள்வழி

"தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளைத் தினசரி கோவில்களிலும், வீடுகளிலும் சைவ மக்கள் ஓதவேண்டும் அதனால் சைவமும் தமிழும் வளர்வதுடன் சைவசமூகமும் இறை அருளால் செழித்தோங்கிடும்" இவ்வாறு பண்டித க. பொ. இரத்தினம் காரைநகரில் நடைபெற்ற மணிவாசகர் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

# கோவில்களிலும் வீடுகளிலும் தினசரி திருமுறை ஓத வேண்டும்

## காரைநகரில் நடைபெற்ற மணிவாசகர்விழாவில் அறிவுரை

மாலையிலே திருவாசக திருமுறை ஊர்வலம் தேவோபசாரத்துடன் கோவிலுக்கு வந்து சேர்ந்தது. வழிநெடுக பல இடங்களில் பூரண கும்பம் வைத்து பக்தியுடன் வழிபாடு நடைபெற்றது. சனிக்கிழமை கூட்டம் திருமுறை ஓதலுடன் ஆரம்பமாயிற்று. மணிவாசகர் சபைத் தலைவர் திரு. ஆ. கனகசபை, வரவேற்புரை நிகழ்த்தினர். பண்டிதர் இரத்தினம் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

'மணிவாசகர் திருவுள்ளம்' என்பதுபற்றி பண்டித சு. அருளம்பலமும், 'திருக்கோவையார்' எனும் விஷயமாக வித்துவான் பொன். முத்துக்குமாரனும், திரு. நம. சிவப்பிரகாசம் "நள்ளேன் நினதடியாரோடல்லால்" என்பது பற்றியும் பேசியபின், திருவாசகத் திருமுறை ஓத, முதல் நாள் கூட்டம் இனிது முடிந்தது.

மறுநாள் ஞாயிறன்று சைவ பரிபாலன சபைத்தலைவர் திரு. த. முத்துசுவாமிப் பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், ஸ்ரீ. கு. பாலசுந்தரக் குருக்கள், "திருவாசகமும் திருக்கோவையாரும்" என்பது பற்றியும், "செம்மனச் செல்வியார்" பற்றி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும் பேசினார்கள்.

மூன்றுவது நாள் திங்களன்று மாலை, சபைத்தலைவர் திரு. ஆ. கனகசபை தலைமை வகித்தார். "இன்னருளே என்னப்பொழியாய்" எனும் விஷயத்தை வித்துவான் மு.சபாரத்தினமும், 'திருச்சதகம்' பற்றி, வித்துவான் க. வேந்தனும், "தென்னாடுடைய சிவன்" எனும் விஷயமாக திரு. க. சிவராமலிங்கமும், "மணிவாசகரும் அருள் நெறியும்" பற்றி பண்டிதை சத்தியதேவி துரைசிங்கமும் பேசினர்.

செவ்வாய்க்கிழமை இரவு "மண் சுமந்தமதுரேசர்" பற்றி, அளவையூர் திரு. சீ. விநாசித்தம்பி, சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார்.

திருவாதிரையன்று இரவு 2 மணிக்கே நடராஜர் அபிஷேகம் வழக்கம் போல் வெகு விசேஷமாக நடைபெற்றது. ஏராளமான மக்கள் பக்தியுடன் கூடியிருந்து அபிஷேகத்தைத் தரிசித்தார்கள். இந்த விழா வருஷத்துக்கு வருஷம் அதிக சிறப்பாக நடைபெறுகின்றது.

இதே சபையினர், ஐந்தாவது வெளியீடாக, "திருவெம்பாவை உரை" எனும் நூலை வெளியிட்டிருக்கிறார்கள். யாருக்கும் எளிதிலே விளங்கும் முறையிலே ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் இந்நூலை ஆக்கியுள்ளார்.

"காரைநகர் எனும் திண்ணபுர மான்யம்" என்ற தலைப்புடனே, திரு. இ. வைத்தியலிங்கம், காரைநகர் சுந்தரேசுவரர் சிவாலயத்தைப்பற்றிய ருசிகரமான வரலாற்றை புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். இளையனார் கோவில், சிவாலயம், சிவலிங்கம், சோமாஸ்கந்த மூர்த்தி, திருப்பணிகள், மடாலயம் முதலிய பல விவரங்களையும் எழுதியுள்ளார்.

மூன்றாம் பிரகாரத்தின் வடபுறத்திலே, பெண்களுக்காக திருமதி தங்கம்மா நடராசா பல்லாயிரம் ரூபாய் செலவில் ஒரு தனி மடாலயம் கட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

தேர்த் திருநாளன்று, பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு மணிவாசகர் மடாலயத்திலே அன்னதானம் நடைபெற்றது.

இந்தப் புண்ணிய காரியத்துக்கு ஏராளமான அன்பர்கள் நன்கொடை அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. சென்ற வருஷம் மிஞ்சியபொருளினால், மடாலயத்தை விஸ்தரித்துக் கட்டியுள்ளனர்.

# கதிர்காமம் - நிர்வாகத்தில் தமிழருக்கும் பங்கு வேண்டும்

## அறுபது ஆண்டுகளுக்கு முன்பாக அரசாங்க அதிபர் கூறிய யோசனை

"கதிர்காமம் பெரியகோவில் அபிவிருத்தி அடையவேண்டுமென அங்கு வழிபடும் பக்தர்களுக்கும் சிறப்பாக தமிழருக்கும் அந்தக் கோவில் நிர்வாகியான பஸநாயக்காவின் தேர்தலில் பங்குபற்ற உரிமை அளிக்கவேண்டும்".

இவ்வாறு 60 வருடங்களுக்கு முன்பாக நடைபெற்ற ஆடிவேல் திருவிழாவைப்பற்றி பதுளை அரசாங்க அதிபராக இருந்த ஜி. ஏ. பாம்கர்ட்னர் என்ற அதிகாரி தமது நிர்வாக அறிக்கையில் யோசனை கூறியுள்ளார்.

அக் காலத்தில் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர் அனுமதிச்சீட்டுப் பெற்றே செல்ல வேண்டும். சுகாதார காரணங்களுக்காக என்று சொல்லி முதலில் வருஷத்துக்கு 300 டிக்கெட்டுகளும், பின்னர் 1000மும் பின்னர் 1500 டிக்கெட்டுகளும் அனுமதித்தனர்.

"உற்சவ திகதிகளை கண்டியிலுள்ள பௌத்த பெரிய குருமார்களே நிர்ணயிக்கிறார்கள். ஒரு மாதம் தாமதமாக திகதி குறிப்பிட்டால், முன்னதாகவே இந்தியாவிலிருந்து யாத்திரீகர்கள் வந்து கதிர்காமம் சென்றனர். சிலர் அங்கு பல மாதங்களையும் கழிப்பது வழக்கம். அவர்கள் பக்திமேலீட்டால் எவ்வித ஆபத்துக்களையும் பொருட்படுத்துவதில்லை.

அனுமதிச் சீட்டுகளைப் பெறுமல் வந்த பல யாத்திரிகர்களை எல்லாம், பொலிஸார் உடன் வெளியேற்றிவிட்டனர்.

மட்டக்களப்பில் 166 டிக்கெட்டுகளை விநியோகித்ததில் 149 பேர்களே வந்தனர். பதுளையில் 166ல் 130 பேரும், காலியிலிருந்து 123, கொழும்பு 79, யாழ்ப்பாணம் 3. ஆக ஆயிரம் டிக்கெட்டுகளை வெளியிட்டதில் 497 பேர்தான் வந்திருந்தார்கள்.

டிக்கெட் இல்லாமல் வந்தவர்களே மிக அதிகம். வழியில் அவர்களைபொலிசார் மறித்துத் திருப்பி அனுப்பிவிட வேண்டியதாயிற்று.

### மட்டக்களப்பிலிருந்து

டிக்கெட் இல்லாமல் வருபவர்களில் பெரும்பாலோரும் மட்டக்களப்பிலிருந்துவரும் தமிழ் இந்துக்களே. புறப்பட்டபின், எப்படியும் தங்கள் நேர்த்திக்கடனை முடிக்க, அவர்கள் உறுதியுடனிருந்தனர். காவலர்களின் தடைகளை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

இவ்வித தமிழர்கள்தான் இந்த உற்சவத்தைமுக்கியமாக ஆதரிப்பவர்கள். காட்டிலே இரகசிய வழியாக அவர்கள் காவலர்களுக்குத் தப்பி வந்தனர். நகருக்கு வெளியில் இருந்து, இரவில் பெரஹரா வரும்பொழுது, அதில் சேர்ந்து விடுகிறார்கள்.

டிக்கெட் இல்லாமல்வருபவர்களுக்கு நான் ஒரு ரூபாய் முதல் 10 ரூபாய் வரை அபராதம் விதித்தேன். அசுத்தம் செய்த குற்றத்துக்காக 4 பேருக்குத் தலைக்கு 2 ரூபாய் அபராதம் விதித்தேன். மொத்தம் 24 பேருக்கு 104 ரூபாய் தண்டம்விதிக்கப்பட்டது.

சில காவலர்களுக்கு கைலஞ்சம் கொடுத்தும் யாத்திரிகர்கள் டிக்கெட் இல்லாமல் வந்துவிட்டதாகத் தெரிகிறது. 50 சதம் முதல் ஒரு ரூபாய் வரை லஞ்சம் கொடுத்ததாக அவர்கள் முணுமுணுத்தனர். லஞ்சம் கொடுப்பதும் குற்றமாகையால் அவர்கள் வேறு விவரங்களைக் கூற மறுத்துவிடுகிறார்கள்.

யாத்திரிகர்களின் சுகாதாரம் மிக மேலாக இருந்தது.

### உற்சவம்

உற்சவத்தை சரிவர நடத்தவில்லை என்று பஸநாயக்கா நிலாமே மீது பல புகார்கள் கிடைத்தன. ஒரு ஊர்வலத்தை நடத்தவில்லையாம். மலை 7 மணிக்கும், நள்ளிரவிலும் இரு ஊர்வலங்களை நடத்தவேண்டும். ஆனால் பஸநாயக்கா, தீவட்டிகளை விநியோகிக்க மறுத்துவிட்டதால் ஒரே ஒரு ஊர்வலம்தான் நடக்கமுடிந்தது. யாத்திரிகர் வந்து தீவட்டி உபயம் செய்ய விட்டுவிட்டார். தீர்த்த விழாவை அவர் தம் இஷ்டப்படி தள்ளிவைத்ததால், பலருக்கு வசதியீனமேற்பட்டது.

கதிர்காம உற்சவம் பெரிதும் ஒரு இந்து திருவிழா. பௌத்த விழா அல்ல. கொழும்பிலிருந்தும், தோட்டங்களிலிருந்தும் வரும் தமிழரின் ஆதரவிலேயே இது வெகுவாக நடைபெறுகிறது. ஆகவே, பஸநாயக்கா நிலாமேயைத் தெரிவு செய்வதில் தமிழருக்கும் பங்கு இருக்கவேண்டும்.

கார்த்திகை மாத விழாவுக்கு ஏராளமான யாத்திரிகர் வருவதாயும், இரண்டொரு நாள் இருக்க ரூ.50வரை சிலவீடுகளை ஆராய்ச்சி வாடகை வசூலிப்பதாகத் தெரிகிறது. தமது வீட்டுத் தாழ்வாரத்தில் இருக்க ரூபாய் 10 வாடகையாம்.

### நூறுவருஷங்களுக்குமுன்

கதிர்காம பெரிய கோவிலில் நூறுவருஷங்களுக்குமுன் வேலுப்பிள்ளை பூசாரி என்பவரே பூசை செய்துவந்தார். அவருக்குப்பின் அவரது மாப்பிள்ளை பொன்னையா பூசாரி அப் பொறுப்பைப் பார்த்துவர பதுளை ஜில்லா நீதிமன்றத்தார் உத்தரவிட்டனர். அதன்பிறகு இது வேறு கைகளுக்கு மாறிவிட்டதாகவும் பதிவுப்பத்திரங்கள் மூலம் அத்தாட்சிகள் கிடைத்துள்ளன.

# சினிமா உலகம்

## சபாஷ் ராமு

சபாஷ் மீனுவை அன்று பார்த்தோம்; இன்று சபாஷ் ராமுவைப் பார்க்கிறோம். இன்னும் இப்படி எத்தனை எத்தனையோ, யார் கண்டார்?

நல்ல குடும்பத்தில் பிறந்த ராமுவுக்குப் பொல்லாத காலம் வந்துவிடுகிறது. மனைவி, தம்பி, குழந்தை இவர்களுடன் அவன் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது. இவர்களைக் காப்பாற்றுவதற்காக அவன் ரிக்ஷாக்காரனைகத் தொழில் புரிகிறான். அவனுக்குத் தன் தம்பி மோஹன்மீது உயிர். அவன் படித்துப் பட்டம் பெற்றுப் பெரிய பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஏழைகளுக்கு உதவி புரிய வேண்டுமென்பதே ராமுவின் இலட்சியம். அந்த இலட்சியத்திற்காகத் தன் உயிரைத் திரணமாக மதித்துச் செயலாற்றுகின்றான் ராமு. கடைசியில், அவன் இலட்சியம் நிறைவேறவே செய்கின்றது.

### பட விமர்சனம்

ராமுவாக நடிக்கும் ராமராவினுடைய நடிப்புப் போற்றத் தக்கதாகவிருக்கின்றது. ரிக்ஷாக்கார வேஷத்தில் அருமையாக நடித்திருக்கும் ராமராவ், எல்லாக் கட்டங்களிலும் உணர்ச்சியுடன் நடித்து, எமது உள்ளங்களைக் கவர்ந்து விடுகிறார்.

அவரது இல்லாளாக வந்து அவருக்கு உற்ற துணையாக விளங்குகிறார் தேவிகா. தேவிகாவின் நடிப்பு இயற்கையாக அமைந்துள்ளது. தனது கணவனைத் தம்பி மோஹனே கைது செய்யும்பொழுது, விம்மித் துடித்து அழும் காட்சி எம்மை உருக்கி விடுகிறது.

மோஹனாக வருபவர் சினிமா உலகத்துக்குப் புதுமுகம். பிரயாசையும், அனுபவமும் அவரை விரைவில் முன்னணிக்குக்கொண்டுவந்துவிடலாமென நம்ப இடமிருக்கிறது.

மோஹனின் காதலி ராணி தான் மாலினி. சிறிய பாகம்; சிரமமின்றி நடித்திருக்கின்றார்.

அவருடைய தந்தையாக வருபவர் திறமையுடன் நடித்துத் தமது பாத்திரத்துக்கு உயிர்த்துவம் அளித்திருக்கிறார்.

எம். என். ராஜம் கௌரவ நடிகை. ஆனால், அவரது நடிப்புச் சாதாரணமே.

வில்லனாக நடித்திருப்பவர் காலஞ்சென்ற ஆர். நாகேஸ்வர ராவ். இவர் இந்தப் படத்திலும் தமது வில்லன்பாகத்தைத் திருப்திகரமாகவே நிறைவேற்றியுள்ளார்.

இன்ஸ்பெக்டர் குமாராகத் தோன்றுபவர் அழகான முகவெட்டுள்ள இளைஞர். ஆனால், நடிப்பிலே முன்னேற எவ்வளவோ இடமுண்டு.

ரேலங்கியின் தலையிலே படத்தின் ஹாஸ்யப் பாகத்தைச் சுமத்தியிருக்கிறார்கள். ரேலங்கியின் தலையிலுள்ள தொப்பி படும் பாடுதான் அதுவும் படுகிறது; பாவம்!

இனிமையான பாடல்கள் சிலவுள. அவற்றில் நல்ல கருத்தும் பொதிந்துளது.

உன்னத கருத்துக்கள், உணர்ச்சி மிக்க சம்பவங்கள், நல்ல நடிப்பு இத்தனையும் நிறைந்த படத்துக்குச் 'சபாஷ்' போடாமல் வேறு என்னதான் செய்ய முடியும்?

## நல்ல தீர்ப்பு

**தா**ன் செய்யாத கொலைக் குற்றத்துக்காக ஆயுள் தண்டனை அனுபவிக்கின்றான் குமாரசாமி. அவன் மனைவி தன் ஒரே மகனைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து, ஒரு வழக்கறிஞனாக்கி விடுகிறாள். தன் தந்தையின் மேல் சுமத்தப்பட்ட வீண் பழியைத் துடைத்தெறிய முற்படும் சங்கர், தனது முயற்சியில் வெற்றியடைந்து விடுகிறான். நிரபராதியான குமாரசாமியை விடுதலை செய்வதன் மூலம், கோர்ட் நல்ல தீர்ப்பை வழங்குகின்றது.

கதை ஆரம்பத்திலிருந்து விறுவிறுப்பாகவே இருக்கிறது. அநேக தமிழ்ப் படங்களில் காணப்படும் அனுவசியக்காதல் காட்சிகளும், மோட்டார் விபத்துக்களும் இப்படத்தில் இல்லை. பார்ப்போரின் கவனத்தை ஈர்க்கும் சக்தியுடன் கடைசி வரைக்கும் இப்படம் செல்வது படத்துக்கு ஒரு தனிச் சிறப்பை அளிக்கிறது.

சங்கராக வருபவர் ஜெமினி கணேசன். அபாரமாக நடிக்காவிட்டாலும், அழகாக நடித்துள்ளார். தந்தையைச் சிறையில் சந்திக்கும் பொழுது அவர் வெளிப்படுத்தும் சோகம் இயற்கையாகவிருக்கிறது. கோர்ட்டில் வாதாடும் பொழுதும், திறமையுடன் நடித்துள்ளார் ஜெமினி. இப்படம் அவருக்கு இன்னுமோர் வெற்றிப் படமாகும்.

அவரது காதலியாக நடிப்பவர் ஜமுனா. முகபாவத்தாலும், விழிகளாலும் பல கதைகள் பேசி விடுவதில் கைதேர்ந்தவர் அவர், இப்படத்திலும், அளவு கணக்காக நடித்திருக்கிறார்.

கண்ணாம்பா, ஜெமினியின் தாய், யாருடைய தாயாக வந்தாலும், சதா அழுவது தானா அவர் வேலை? அதோடு காது செவிடுபடும்படி கத்தியும் தள்ளுகிறார்.

டி. ஆர். ராமச்சந்திரன் மருமகன்; டி. என். துரைராஜ் அவருடைய மாமன். கேட்க வேண்டுமா இவர்கள் வேடிக்கைக்கு? நீண்ட காலத்துக்குப் பின்னர், ராமச்சந்திரனின் ஹாஸ்யத்தைக் கண்டு நம்மால் வாய் விட்டுச் சிரிக்கவும் முடிகிறதே என்று எண்ணும் பொழுது, ஆனந்தமாகத்தானிருக்கிறது.

எம். என். ராஜத்தின் பாகம் சிறிய பாகம். கச்சிதமாக நடித்திருக்கிறார்.

சக்ரபாணி, சகஸ்ரநாமம் இருவரும் தமது பாத்திரங்களைத் திறமையாக நடித்துள்ளனர்.

ராகினியின் நடனம் நன்றாகவிருக்கின்றது. பாடல்கள் பரவாயில்லை.

டைரக்ஷனில் திறமை புலப்படுகிறது. ஆனாலும், சில காட்சிகளைத் தவிர்த்திருக்கலாம்.

நேர்மைக்கு வெற்றி அளிக்கும் **நல்ல தீர்ப்பு** சினிமா நேயர்களுக்குத் திருப்தி அளிக்கவும் தவறாது எனக் கூறலாம்.

## காத்தவராயன்

படத்தின் ஆரம்பத்திலே சிவன்—பார்வதி நடனம் நடைபெறுகின்றது. சிவனாக கோபி கிருஷ்ணாவும், பார்வதியாக கமலா லக்ஷ்மணும் ஆடுகிறார்கள். சிவன் நடனப் போட்டியில் வெற்றிபெற்று விட்டானென்று அசூயை கொள்கின்றாள் சக்தி. இதற்காக, சக்தியை, அவள் மகன் காத்தவராயனுடன் பூவுலகுக்கு அனுப்பி வைத்துவிடுகிறார் சிவன், பொறாமை கொண்டதற்குத் தண்டனையாக.

இப் பூவுலகின்கண் வந்திறங்கும் சக்திதான் கண்ணாம்பா; காத்தவராயன், சிவாஜி கணேசன். இவர்களிருவரும் முறையே 'மகனே!' என்றும், 'அம்மா!' என்றும் கதறுவது சர்வசாதாரணமாகிவிட்டது. ஆகவே, சர்வ சாதாரணமான விஷயத்தைப்பற்றி ரசிகர்கள் ஏன் அதிகம் கவலைப்படப்போகிறார்கள்?

காத்தவராயனாக வரும் சிவாஜி கணேசன் கையில் வாளேந்திப் போரிடுகிறார்; தலையில் பானை தாங்கி ஆடுகிறார்; போதாக்குறைக்கு மல்யுத்தம் கூடச் செய்கிறார்! இத்தனைக்கும் காத்தவராயனில் வழக்கமான சிவாஜியை நாம் தேடுகிறோம், தேடுகிறோம்—ஏன்? தேடிக்கொண்டே இருக்கிறோம்......

சந்திரபாபுவும் தங்கவேலுவும் ஒன்றாக இப் படத்தில் நடிப்பதன் காரணத்தை முன்னிட்டு, எவராவது ஏதாவது பெரிதாக எதிர்பார்ப்பாரேயானால், அவர் நிச்சயமாக ஏமாறுவாரென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

காத்தவராயன் காதலிக்கும் பெண்தான் ஆரியமாலா. ஆரியமாலாவாகத் தோன்றுபவர் சாவித்திரி. அவருடைய உடலமைப்பு அவரது நடிப்புக்கு ஊறு செய்கின்றது என்பது இப் படத்தில் தெளிவாக எமக்குவிளங்குகின்றது. காதல் காட்சிகளில், அவருடைய மயக்கும் புன்னகைக்கு மாத்திரம் பஞ்சமில்லை.

மலையாள மாந்திரீகனாக வரும் டி. எஸ். பாலையா தமது நடிப்பினால் எம்மையெல்லாம் மலைக்கச்செய்து விடுகிறார்! அவர் மலையாளம் பேசுவது மக்களுக்கு நல்ல ஹாஸ்ய விருந்தாக அமையும் என்று துணிந்து சொல்லலாம். பாலையாதான் காத்தவராயனை ஓரளவுக்காவது 'காத்த'வராவர்

படத்தில் எனக்குப் பிடித்த காட்சி, பருந்தும் பாம்பும் சண்டையிடும் காட்சி.

டைரக்ஷனில் பல குறைகள் உள. ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு இரண்டுமே தரங் குறைந்தனவாகக் காணப்படுபன்றன.

—'மின்மினி'

## சினிமா கவிஞர்களுக்கு பொன்னாடை

அறிஞர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பது தமிழ் உலகுக்குப் புதிதல்ல. இப்போது இவ் வைபவம் மலிந்து விட்டதாயினும் தக்கவர்களைத் தக்கவாறு கௌரவிக்கும்போது அதற்கு ஒரு தனி மதிப்பு உண்டு, சினிமா மக்களின் வாழ்க்கையோடு இன்று நன்கு இணைந்து விட்டபடியால் சினிமாக் கவிஞர்களுக்கும் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்க வேண்டுமென தமிழ்ப் பேராசிரியர் ஔவை சு. துரைசுவாமி ஆலோசனை கூறியுள்ளார்.

ஒருவர் எந்தப் பக்கம் சாய்கிறாரோ அந்தப் பக்கமே எல்லோரும் சாய்கிறார்கள் என வள்ளுவர் கூறிய கருத்தை சினிமாப் படத்திற் கூட அழகாகக் காட்டுகிறார்கள் என்பதற்குப் பேராசிரியர், "சாய்ந்தால் சாய்கிற பக்கமே சாய்கிற செம்மறி ஆடுகளா?" என்ற சினிமாப் பாடலை உதாரணமாகக் காட்டியுள்ளார். சினிமாக் கவிஞர்களுக்கு இனி யோகந்தான்!

## ஆர். ஏ. பட நிலையத்தாரின் 'பண்ணையார் மகன்'

மஜெஸ்டிக் பட நிலையத்தில் ஆர். ஏ. பட நிலையத்தாரின் 'பண்ணையார் மகன்' வேகமாக வளர்ந்து இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. டி. ஆர். மகாலிங்கம், மாலினி, வி. ஆர். இராஜகோபால், டி. கே. இராமச்சந்திரன் ஆகியோர் நடித்த நாடகக் காட்சிகள் இதற்கெனப் படமாக்கப்பட்டுள்ளன.

## 'குழந்தைகள் கண்ட குடியரசு'

பத்மினி பட நிலையத்தாரின் 'குழந்தைகள் கண்ட குடியரசு' பரணியில் வேகமாக வளர்ந்து வருகிறது. பேபி சித்ரா, பேபி லட்சுமி, மாஸ்டர் கோபி, ஆகிய குழந்தைகள் இப்படத்தில் நடித்து வருகின்றனர். இந்த இராசா இராணிக் கதையில் கே. சாரங்கபாணி, மாதவன், ஆர். எம். சேதுபதி, சாமிக்கண்ணு ஆகியோரும் நடிக்கின்றனர்.


28-ந் உ வியாழன் முதல்!

சிலோன் என்டர்ரெயின்மென்ற்ஸ் தாபனத்தாரின்

உன்னத வெளியீடு!

செண்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை)

ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருக்கோணமலை)

மற்றும் மூன்று திரைகளில்

★ சிவாஜி கணேசன்

★ எஸ். வி. சகஸ்ரநாமம்

★ எஸ். வி. ரங்கராவ்

★ மாலினி

★ சௌகார் ஜானகி

★ டி. ஆர். ராமச்சந்திரன்

★ டி. கே. ராமச்சந்திரன்

நடிக்கும்



அவள் யார்?

எல்லோரும் பார்த்து மகிழவேண்டிய ஓர் குடும்பச்சித்திரம்!